விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 17 வெள்ளிக்கிழமை (02.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 226

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# செப்ரெம்பர் 21 இல் மாகாண சபைத் தேர்தல்

(கொழும்பு)

இலங்கையில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறும் என தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றார். (20ஆம் பக்கம் பார்க்க)



## தேர்தலின் போது இராணுவம் முகாமில் இருக்க வேண்டும்

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் தங்களுடைய முகாம்களிலேயே இந்த தேர்தல் காலங்களில் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் இராணுவத்தால் அச்சுறுத்தப்படுவது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.



அதேவேளை இராணுவத்தினர் தம்மீதான குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை என மறுத்துள்ளனர்.

எனவே இராணுவத்தினர் தமிழ்த தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியில் சடலங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலமும்,பெண் ஒருவரின் சடலுமும் நேற்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மண்கும்பான் பகுதியில் நேற்றுக் காலை 9 மணிக்கு ஆண் ஒருவருடைய சடலமும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் பெண் ஒருவருடைய சடலமும் மீட்கப்பட்டுள்ளது.

இருவருடைய வயதும் சுமார் 40 தொடக்கம் 50 வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பொலிஸார் அப்பிரதேசத்தில் மேற்கொண்ட விசாரணையில் குறிப்பிட்ட காலத்தில் எவரும் காணாமல் போகவில்லை எனவும் சட்டவிரோதமாக வெளிநாடு சென்றவர்களின் சடலமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ-6)

## தேர்தல் கண்காணிப்பில் சர்வதேச பணியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் இடம்பெற்ற விசேட பத்திரிகையாளர் சந்திப்பின் போது வடக்கு மாகாணத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் இந்த அறிவிப்பை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப் படவுள்ளார்கள். இவர்கள் யாழ். மாவட்டத்தில் நிலைத்திருந்து தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள்.

சார்க் நாடுகளின் பிரதிநிதிகள், பொதுநலவாய அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிய தேர்தல்கள் அதிகாரிகள், ஒன்றியப் பிரதிநிதிகளும் இதில் பங்குபற்ற உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்குத் தேர்தலின் போது சர்வதேச கண்காணிப்பாளர்கள் எவரும் வரமாட்டார்கள். அதற்கான கால அவகாசத்தினையோ அல்லது அழைப்பினையோ இலங்கை அரசாங்கம் வழங்கவில்லை என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான சுயாதீன அமைப்பான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணியாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வினவியபோது சர்வதேச கண்காணிப்பாளர்கள் வரமாட்டார்கள் என தேர்தல் திணைக்களம் தெரிவிக்கவில்லை என தெரிவித்தார் உதவித் தேர்தல் ஆணையாளர் அச்சுதன் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## ஆர்ப்பாட்டம் மீது தாக்குதல் ஒருவர் பலி; பலர் படுகாயம்

(கொழும்பு)

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில்



ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். படுகாயமடைந்த 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றிரவு 7.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக் (02ஆம் பக்கம் பார்க்க)

வட மாகாண சபைத் தேர்தல் -2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
யாழ் மாவட்ட வேட்பாளர்
துணிச்சல்மிக்க இளம் சட்டத்தரணி
கேசவன் சஜந்தன்
(E-001)

வேட்புமனுத் தாக்கல் நிறைவு

## 11 கட்சிகள், 9 சுயேட்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிட யாழ.மாவட்டத்தில் 13 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 10 சுயேட்சை குழுக்களும் வேட்புமனுத்தாக்கல் செய்த போதும் அதில் இரண்டு கட்சியினதும் ஒரு சுயேட்சை குழுவினதும் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ்.மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சியுமான சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான யாழ்.நிர்வாக மாவட்டத்திற்கான வேட்புமனுக்கல் சமர்ப்பிக்கப்பட்டு இன்று (நேற்று) பிற்பகல் 12.30 மணியுடன் நிறைவடைந்திருக்கின்றன.

அந்த அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் 23 வேட்பு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டன.

13 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் 10 சுயேட்சைக் குழுக்களினதுமான 23 வேட்பு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் அடிப்படையிலே மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் மூன்று நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன.

இரண்டு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளினதும் ஒரு சுயேட்சை குழுவினதும் நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன.

வர்த்தன பெரமுன, எமது தேசிய முன்னணியும், முருகன் குமாரவேல் தலைமையில் தாக்கல் செய்யப்பட்ட (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாணவர்களை பாதிக்காது பிரசாரம் செய்ய வேண்டும்

## உதவித் தேர்தல் ஆணையாளர் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

விதிமுறைகளை மதித்து நீதியானதொரு தேர்தலை நடத்த அனைத்து வேட்பாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

க.பொ.த உயர்தர மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை பாதிக்காத வகையில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க வேண்டும் என வடக்கு மாகாணத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் அச்சுதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று பிற்பகல் 1.50 மணியளவில் இடம்பெற்ற விசேட பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டக் கல்வியிலும் பண்பாட்டிலும் கலாசாரத்திலும் உயர் விழுமியத்தைக் கொண்ட மாவட்டம் என்ற பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ளது என்ற ரீதியில் கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்கு களங்கம் ஏற்படாத வகையில் சர்வதேசத்தின் முன்பும் ஏனைய மாவட்டங்களிலும் எமது சிறப்பை பேணக்கூடிய வகையில் இந்தத் தேர்தல் அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம்.

அதேபோன்று க.பொ.த உயர்தரப்பரீட்சை நெருங்கி வருகின்றது அதற்கான ஆயத்தங்களில் எமது மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தோற்றுவதற்கு தயாராகிக் கொண்டு இருக்கின்றார்கள்.

அவர்களின் வாழ்க்கையிலே இது மிகவும் முக்கியமான படி. அவர்களின் வாழ்க்கையை தீர்மானிக்கின்ற கட்டம். இந்த மாணவர்களின் கல்விக்கு ஏதாவது இடையூறு ஏற்படுத்தும் வகையிலே தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என அனைத்து வேட்பாளர்களிடமும் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அத்தோடு நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவமும் ஆரம்பிக்கவுள்ளது. இந்த உற்சவ காலத்தில் யாழ்.மாவட்டத்திலிருந்து மட்டுமல்லாது வெளிமாவட்டங்களில் இருந்தும் பெரும்திரளான பக்தர்கள் வருவார்கள். அவர்களுக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடையூறு ஏற்படுத்தக் கூடாது.

அத்தோடு இந்தக் தேர்தல் தொடர்பாக சர்வதேசம் தனது அவதானத்தை செலுத்தி வருகின்றது. எனவே தேர்தல் இலங்கையர்கள் என்ற வகையிலே நாட்டின் கௌரவத்தை காப்பாற்றவேண்டிய தேவைஎங்களுக்குஇருக்கின்றது.

எனவே தேர்தல் விதிமுறைகளை மதித்து அதனை மீறாமல் நீதியானதும் சுதந்திரமானதுமான ஒரு தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## வெடி கொளுத்தியவர்கள் எச்சரிக்கப்பட்டார்

யாழ். மல்லாகம் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் பாதிக்கும் வகையில் வெடிகொளுத்தி அட்டகாசம் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான இருவரையும் நீதிமன்றம் எச்சரிக்கை செய்து விடுதலை செய்துள்ளது.

யாழ். மல்லாகம் நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அலுவலகத்தில் முன்பாக வெடிகொளுத்தி குழப்பத்தை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தெல்லிப்பழையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இவர்கள்நேற்றுமுன்தினம்மாலைநீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் இவர்களை எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.(எ-6)

## ஆர்ப்பாட்டம் மீது...

குதலிலேயே இவர்கள் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதில், 11 பேர் துப்பாக்கி பிரயோகத்தில் காயமடைந்துள்ளதகவும்அவர்கள்கம்பஹா மற்றும்வத்துபிட்டிவல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வெலிவேரிய பிரதேச மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் தடுத்து நிறுத்த முயற்சித்துள்ளனர். தொழிற்சாலையொன்றின் கழிவு நீர் காரணமாக குடிநீர்ப்பிரச்சினையை எதிர்நோக்கி வருவதாககிராம மக்கள்தங்களது கடும்எதிர்ப்பை வெளியிட்டு வந்தனர்.ஆர்ப்பாட்டம் வன்முறையாக வெடித்ததனைத் தொடர்ந்து பொலிஸாரும் இராணுவத்தினரும் கடமையில்ஈடுபடுத்தப்பட்டனர். இதன்போது கிராம மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## அரசுடன் இணைவதற்கு தயாராகும் ஐ.தே.க உறுப்பினர்

அரசாங்கத்தின் தேர்தல் பிரசாரத்திற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் எதிர்க்கட்சியை சேர்ந்த 6 பேர் அரசுடன் இணைந்து கொள்ள உள்ளனர் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

கம்பளை வெலிகல்ல பொல்லங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் 6 முக்கியஸ்தர்கள் உட்பட மேலும் பலர் எதிர்வரும் நாட்களில் அரசுடன் இணைந்து கொள்ள உள்ளனர்.

ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு பிரதிநிதிகளை தெரிவு செய்தனர். அவர்களில் 35 பேர் தற்போது அரசுடன் இணைந்துள்ளனர்.

தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று உணர ஆரம்பித்துள்ள பலர் அரசாங்கத்தின் கொள்கைகளை நன்கு புரிந்து கொண்டு அரசுடன் இணைந்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த 35 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணைந்துள்ளதால் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமன்றி ஐக்கிய தேசியக்கட்சியின் சாதாரண உறுப்பினர்களும் அரசுடன் இணைந்து வருகின்றனர் என்றார். (எ-11)

## மந்திரி வளாகத்தில் தனியாரின் வீடு அமைப்பு?

யாழ்.நல்லூர் பகுதியில் உள்ள தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான மந்திரி மனை வளாகத்தினுள் தனியார் ஒருவர் கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்.

யாழ்.மாவட்டத்தின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக விளங்கும் மந்திரி மனை வளாகத்தினை ஊடறுத்து தற்போது மிகவும் வேகமாக மதில் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

சட்டவிரோதமாக தொல்பொருள் திணைக்கழகத்திற்கு சொந்தமான காணியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த நடவடிக்கையினைத் தடுக்க எவரும் முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு யாழ்.மாவட்டத்திலுள்ள தமிழர்களின் வரலாற்று சின்னங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (எ-6)

## சாதாரண தர மீள்திருத்த முடிவுகள் வெளியாகின

மீள் திருத்தம் செய்யப்பட்ட க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் நேற்று வெளியிடப்பட்டது.

நேற்று மீளாய்வு செய்யப்பட்ட முடிவுகள் இணையத்தளத்தில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் எம்.என்.ஜே. புஸ்பகுமார தெரிவித்தார்.

80 ஆயிரம் பரீட்சார்த்திகள் மீள்பரிசீலனைக்காக விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சார்த்திகள் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்என அவர்மேலும் தெரிவித்தார். (எ-11)




தூரிகையின்
**கேக் ஐசிங்**
**பயிற்சி வகுப்புகள்**
**04.08.2013**
ஞாயிறு .2.30 மணிக்கு
புதிய பிரிவு
ஆரம்பமாகின்றது
கலந்து கொள்ள விரும்புவோர்
தூரிகையின் அலுவலகத்துடன்
தொடர்பு கொள்க
**தூரிகை**
பொன் கந்தையா பாதை,
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
(C-4194)



**ST.JOHN'S COLLEGE, JAFFNA**
**VACANCIES**

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

1. **Teachers**
   - Tamil 6-A/L
   - Sinhala Language
   - Subjects in Primary School - English Medium

2. **Administrative Officer** with a good command of English, Computer Literacy and experience

Please send your CV including the contact details of two non-related referees by post or via e-mail on or before 15th August 2013. Only shortlisted candidates will be called for an interview.

**The Principal**
**St. John's College**
**Jaffna**

**stjohns@sltnet.lk**
(C-4191)



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே.: 021 321 0815
E-mail: valampurii@yahoo.com




**பிள்ளையார் இன்**
இன்று முதல் அதிவிசேட 25% விலைக் கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவை யுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

**இன்றைய விசேட உணவு:**
✔ தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்) ரூபா 80/-
✔ மசாலா தோசை (உருளைக் கிழங்கு கறியுடன்)
மசாலாபூரி சப்பாத்தி (உருளைக் கிழங்கு கறியுடன்)
(C-4188)
தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கிருஷ்ணன்(முத்தண்ணை)



கதிர்காம கோவிலடி, வதிரி கரவெட்டியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளைகிருஷ்ணன்(முத்தண்ணை)(இளைப்பாறிய லிகிதர், றப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்) 31.07.2013 புதன்கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னாச்சி தம்பதிகளின் மருமகனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், கமலநாயகி, விமலநாயகி, தேவரஞ்சனி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்பல்கலைக்கழகம்), மனோரஞ்சனி(ஆசிரியை, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீரஞ்சனி( நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பருத்தித்துறை பிரதேச செயலகம்), தவச்செல்வம் (கனடா), தவரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, அன்னப்பிள்ளை, முருகேசு மற்றும் குஞ்சியார், திருநாவுக்கரசு (செல்லையா)( கனடா), செந்தையா (இரத்தினம்), தெய்வானை (செல்லம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான கந்தையா, பொன்னையா, கந்தசாமி,இலட்சுமி, சிவகாமி, ஆனந்தராசா மற்றும் சிதம்பரப்பிள்ளை, சிவக்கொழுந்து, கிருஷ்ணராசா(கனடா), கதிர்காமத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் குலசிங்கம், பாலச்சந்திரன், சிவாஸ்க்கரன், பிரணவன், ஸ்ரீகரன், இளவரசி, கிருஷ்ணபிரபா ஆகியோரின் மாமனாரும்,

பார்த்திபன், பிரசாந்தி, கிருசாந்தி, அஜந்தா, ஆதர்சன்,தசீகரன், கிருஷ்ணஹரின், ரிஷீகரன், மானஷா, வைஷ்ணவி, ஆதித்தியன், சூரியன், சுபீட்சா, லக்சயா, நிலா, மஹதி, நீதுசகன்,ஹம்சத்வனி,ரகுநாதன்,சிவகரன் ஆகியோரின் பேரனும்,றிஷா, வர்ணன், நவீட்டா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் வரும் ஞாயிறு காலை 10 மணியளவில் நடைபெற்று அலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அளவும் அனுசரிப்பும்

ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான்.அவனது தொழில் உடைகள் தைப்பதாகும்.

அவன் தனக்கென ஒரு சொந்தமான தையல்கடை வைத்திருந்தான்.

ஒருநாள் அவனிடம் ஒருவன் வந்து ஒரு சட்டைத் துணியைக் கொடுத்து தைக்கும் படியாக சொன்னான்.

“வருகிற சனிக்கிழமை வந்து வாங்கிக் கொண்டு போ!” என்று அவன் சொன்னான்.

அதே மாதிரி இவன் வந்தான் .அவனும் தான் தைத்து வைத்திருந்த சட்டையைக் கொடுத்தான். இவன் அதை வாங்கி அங்கே அளவு பார்த்தான்.

கைநீளம் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருந்தது.

வலதுகை இடது பக்கத்தை விட நீளம் குறைவாக இருந்தது.

இவன் முணுமுணுக்க ஆரம்பித்தான். “ என்ன இது... இப்படி பிழையாக தைத்திருக்கிறாய்! ” என்றான்.

அதற்கு அவன் “அய்யய்யோ... இதற்காகவா சங்கடப்படுகிறாய்? வலது கையை சீர்செய்தால் சரி வரும். அந்தச் சட்டையிலே உள்ள கலை அம்சத்தை கவனியுங்கள். எவ் வளவு அழகாக வைத்துள்ளேன் பார்... ஒரு சிறிய குறையை பொருட்படுத்த வேண்டாம்.நான் கூறிய மாதிரி கையை சற்று உள்ளே இழுத்து வைத்துக் கொண்டு நடந்து போனால் சரியாக இருக்கும் என்றான்.

இவனும் யோசித்துப்பார்த்தான். சரியாகத்தான் இருந்தது. சற்று வலது கையை உள்ளே இழுத்து... சட்டையை சரியாக இருக்கிற மாதிரி செய்தான்.

இப்போது மறுபடி வேறு பிரச்சினை. வலது கையை உள்ளே இழுத்த மாதிரி வைத்துக் கொண்டதும் முதுகு பக்கம் சற்று துணி தளர்ச்சியாக தொங்கிற மாதிரி இருந்தது.

“ என்ன இது! முதுகுப்பக்கம் துணி குவிந்து விட்டதே!” என்றான். இவன் மறுபடியும் முணுமுணுக்க ஆரம்பித்தான்.

“உடம்பை அதற்கு தகுந்தவாறு வளைத்துக் கொண்டால் சரியாகப் போய்விடும்.இதற்காக அந்த அழகான தையலைப் பிரித்து அதிலே உள்ள கலையம்சத்தைக் கெடுக்க என் மனம் இடம் தரவில்லை. எவ்வளவு தளர்த்தியாக இருக்கிறதோ அவ்வளவுக்கு சற்று உடம்பை வளைத்துக் கொடுத்தால் போதும்”என்றான்.

அதுவும் நல்ல யோசனையாகத் தெரிந்தது இவனுக்கு... சரியென்று கூறிவிட்டு புறப்பட்டான். தெருவிலே இறங்கினான். கையை சற்று உள்ளே இழுத்தான்.உடம்பை சற்று வளைத்தான்.சட்டைக்கு ஏற்றாற்போல் செய்தான். மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

இப்போது எதிரிலே ஒருவன் வந்தான்.இவனை உற்றுப் பார்த்தான். இவன் அணிந்திருக்கும் சட்டையைப் பார்த்தான். ஆகா! அற்புதம்! என்றான்.

“சும்மா சொல்லக் கூடாது... மிகவும் நன்றாக உள்ளது. நிச்சயமாக இது... இந்த ஊரிலே ஒருவன் இருக்கிறான். அவன் தைத்ததாகத்தான் இருக்கும்” என்றான்.

இதைக் கேட்டதும் அவனுக்கு ஆச்சரியம்.“எப்படி அவ்வளவு சரியாக சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டான்.

இதற்கு அந்த வழிப்போக்கன் சொன்னான். “அவன் மிகவும் கெட்டிக்காரன்... உங்களை மாதிரி உடம்பும் கையும் வளைந்துபோன ஒருவனுக்கு அவனைத்தவிர வேறு யாராலேயும் இவ்வளவு பொருத்தமாக சட்டையைத் தைக்க முடியாது” என்றான்.

சற்று யோசித்துப் பாருங்கள். அவனுக்காக இவன் அனுசரிக்கப்போய் இவனுடைய நிலைமை எப்படியானது?

இதே மாதிரித்தான் சில சடங்குகளும் சம்பிரதாயங்களும் எம்மைக் கோமாளியாக மாற்றிவிடும்.

எதுவாக இருந்தாலும் எதிலும் அறிவுபூர்வமான அணுகுமுறை அவசியம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தனிநாயகம் அடிகளால் நூற்றாண்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் விழா இன்று வெள்ளிக்கிழமை முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை மன்னாரில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆரம்பவிழா இன்று காலை 9 மணிக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அரங்கில் இச் சங்கத்தலைவர் அருட்திரு.தமிழ் நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.

முதல்நாள் விழாவில் காலை அமர்வாக தொடக்க விழா இலக்கிய அரங்கு,கலையரங்கு ஆகிய மூன்று அரங்குகளாக நிகழ்வுகள் இடம் பெறும்.

தொடக்க விழாவின் பிரதம விருந்தினராக மன்னார் அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரபிதா எஸ்.ஞானப் பிரகாசம், வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ச.மேகநாதன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி ரதினி யூட், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

விழாவின் போது தமிழாழி என்ற பெயரில் நூற்றாண்டு விழா மலரும் வெளியிடப்படும்.

பாடசாலை மாணவ, மாணவர்களின் நடன நாட்டிய நிகழ்வுகளும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் யார் குழந்தை என்ற நாட்டுக் கூத்து நாடகமும் இடம்பெறும்.

மாலை அமர்வு பிற்பகல் 2 மணிக்கு மன்னார் தமிழ் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.சிவானந்தன் தலைமையில் நடைபெறும் அரங்குக்கு இலக்கிய அரங்கு வித்துவான் ரகுமான் அரங்கு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இவ்வரங்கில் பிரதம விருந்தினராக மன்னார் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ. ஜே.துரம் கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் தலைவர் வைத்தியர் எம்.கதிர்காமநாதன், மன்னார் பொது வைத்தியசாலை நிர்வாக அலுவலர் ஜனாப் எஸ். எம்.என். சஜானி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் அமர்வின் சிறப்பு நிகழ்வாக தனி நாயகமானார் என்ற தலைப்பில் கவியரங்கம் இடம் பெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றத்தினால் சுழலும் சொற்போர் நிகழ்வு இடம் பெற்று தொடர்ந்து நடன நாட்டிய நிகழ்வுகள் நடைபெறும்.

மூன்றாவது அமர்வு மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

இதற்கு கலையரங்கு கவிஞர் நாவண்ணன் அரங்கு எனப் பெய ரிடப்பட்டுள்ளது.

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் ஜனாப், மக்கள் காதர் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எம். ஸ்ரீஸ்கந்தகுமார், மடு பிரதேச செயலாளர் எவ்.சி. சத்தியசோதி கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வரங்கின் சிறப்பு நிகழ்வுகளாக மன்னார் இளங்கலைஞர் மன்றம் வழங்கும் கர்நாடக இசைக் கச்சேரி இடம் பெறுகின்றது.

அத்துடன் நானாட் டான், ஆவணம் கிராமத்தைச் சேர்ந்த புனித கார்மேல் அன்னை கலாமன்றத்தினால் தாவீதின் வெற்றி என்ற நாட்டுக் கூத்து நாடகம் இடம் பெறுகின்றது.

தொடர்ந்து பாடசாலை மாணவியர்களின் பல்வேறு நடன நாட்டிய நிகழ்வுகள் இடம்பெறும்.

(அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100-140 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 80 |
| தக்காளி | 40 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 60-80 | 120 | 100 |
| கரட் | 140 | 140 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 160-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 90 | — | 100 |
| பயற்றங்காய் | 30 | 40 | 50 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 70 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 70 | 200 | 120 |
| போஞ்சி | 120 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | — | — |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 20 |
| தேசிக்காய் | 90 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 100 | 120 |

## இராசி பலன்

02.08.2013

(ஆடி 17, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

ஏகாதசி முன்னிரவு 8.39 மணிவரை

ரோகினி முற்பகல் 11.13 மணிவரை

இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

சுபநேரம் 6.03-7.33 மணிவரை

ஏகாதசி விரதம்

**மேடம்** காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**மிதுனம்** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக சற்று அலைய வேண்டி ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், கெளரவமான நாள்.

**சிங்கம்** தொட்ட காரியம் துளிர்விடும் நாள், தூர தேசச் செய்திகள் மனமகிழ்ச் சி தரும், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், போசன நன்மையுண்டு.

**கன்னி** மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், பற்றாக்குறை தீர்ந்து பணவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படலாம், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம்.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெறுவீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், களஸ்திர நன்மையுண்டு.

**தனுசு** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், நோய்கள் குணமாகும், சுவாரஸ்யமான நாள்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் சாதகமாக அமையும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம்பெறலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்** வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள், உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சல்லிகள் பறிக்கப்பட்டு

# மூன்று வருடமாகியும் புனரமைக்கப்படாத வீதி


(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு வத்திராயன் வாரி விட்டான் எனும் வீதியானது திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

கடந்த கால யுத்தத்தின் பின்னர் வடமராட்சி கிழக்கு பிரதேசம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு அனைத்து உள்ளக வீதிகளும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டபோது இந்த வீதியும் புனரமைப்பு வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஆயினும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்ட இவ் வீதியின் புனரமைப்புப் பணிக்காக கருங்கற்கள், சல்லி, கிரவல் மணல் என்பன வீதி இருமருங்கிலும் போடப்பட்டு குவிக்கப்பட்ட போதிலும் மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் வீதியின் புனரமைப்பு வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் இவ் வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக கூறுகின்றனர்.

எனவே இவ்வீதியை புனரமைப்பு பணிக்கென ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் விரைந்து வேலைகளை ஆரம்பித்து மக்கள் பயணிப்பதற்கு ஏற்ற வீதியாக இதனை அமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)




# பொலிஸார் தேவையற்ற விடயங்களில் தலையிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ். நீதவான் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**தேவையற்ற விடயங்களில் பொலிஸார் தலையிடக்கூடாது என யாழ்.நீதவான் பெ.சிவகுமார் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு எச்சரித்துள்ளார். ஆனைக்கோட்டையில் கூலித் தொழிலாளி ஒருவர் வீட்டுக்கு நீதிமன்ற அனுமதியின்றி புகுந்து அங்கிருந்த பொருட்களை வெளியில் அள்ளிவீசி அடாவடித்தனம் புரிந்தமை தொடர்பான வழக்கு விசாரணை நேற்றையதினம் யாழ்.நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே யாழ்.பொலிஸாரை மேற்கண்டவாறு நீதவான் எச்சரித்துள்ளார்.**

இராணுவத்தினர் பொலிஸாரை அழைத்துச் சென்று சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அவர்களை அழைத்துச் செல்வோர் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கடுந்தொனியில் எச்சரித்துள்ளார்.

ஆனைக்கோட்டை பொன்னையா லேன் பகுதியிலுள்ள வீட்டிலிருந்தவர்களை வீட்டின் உரிமையாளர் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு லண்டனில் இருந்து வந்த பெண்ணொருவர் வீட்டிலிருந்தவர்களை பலவந்தமாக வெளியேற்றியது மட்டுமல்லாது அங்கிருந்தவர்களை அடியாட்கள் மூலம் அச்சுறுத்தியுமுள்ளார்.

இதில் தம்மை புலனாய்வாளர்கள் என இனங்காட்டிய 3 இளைஞர்களும் அவ் வீட்டாரை அச்சுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் யாழ்.பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காததைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பில் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய புலனாய்வுத் துறையினர் எனக் கூறியோர் மீது விசாரணை நடைபெற்றது. இதன் பின்னர் பொலிஸாரை நடவடிக்கை எடுக்குமாறும் பணிந்திருந்தனர்.

எனினும் பொலிஸார் இது விடயத்தில் நடவடிக்கை எடுப்பதில் தயக்கம் காட்டியே வந்துள்ளனர். இந்நிலையில் யாழ். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரணை செய்த நீதிமன்று வீட்டினுள் அடியாட்கள் உட்பட எதிர்மனுதாரர் எவரும் நுழையக் கூடாது எனவும் கட்டளை பிறப்பித்திருந்தது. இந்நீதிமன்றக் கட்டளையை ஒட்டுவதற்காக அங்கு சென்ற நீதிமன்ற பணியாளர்களைத் தடுத்து அவமதிப்புச் செய்ததோடு பின்னர் அவர்களால் ஒட்டப்பட்ட நீதிமன்ற கட்டளைகளும் கிழித்தெறியப்பட்டன.

அத்துடன் வீட்டின் திறப்பை மனுதாரரிடம் ஒப்படைக்குமாறு மன்று கட்டளையிட்ட போதிலும் அதனையும் எதிர்மனுதாரர்கள் கொடுக்காது நீதிமன்றின் கட்டளையை அவமதித்திருந்தனர். இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் யாழ். நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது வீட்டுத் திறப்பை மனுதாரரிடம் மன்றில் வைத்தே ஒப்படைத்ததோடு வெளிப்படலைத் திறப்பு கொடுக்கப்படாவிடின் மன்றின் கட்டளைப்படி உடைத்தெறியுமாறும் உத்தரவிட்டார்.

எதிர் மனுதாரரான குறித்த வெளிநாட்டுப் பெண்ணை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததோடு எதிர்வரும் காலங்களில் சட்டத்தை மீறி செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்தார்.

மேலும் சட்டவிரோதமாக பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை அழைத்து செயற்பட்டு நாட்டை சீரழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் 6 மாத காலம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் எச்சரித்தார்.

மேலும் பொலிஸார் மற்றும் இராணுவம் மன்றுக்கு பெரிதல்ல. மன்றின் கட்டளையே இறுதியானது எனவும் கூறினார்.

இவ்வழக்கில் மனுதாரர் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆஜராகியிருந்ததோடு சட்டத்தரணி மு.றெமிடியஸ் மன்றின் கட்டளையை எதிர்மனுதாரர் மீறியமையானது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தார். (அ-4)

# போக்குவரத்து விதிகளை மீறிய ஏழு நபர்களுக்கு அபராதம் விதிப்பு

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிளில் பயணித்து வீதிப் போக்குவரத்தை மீறிய ஏழு நபர்களுக்கு 31 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் சம்பவதினம் வெவ்வேறு இடங்களில் குறித்த ஏழு நபர்களுக்கு எதிராக வருமானவரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம், பாதுகாப்பு தலைக்கவசம் இன்றி செலுத்தியதாக குறித்த ஏழு நபர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர்.

இவ் வழக்கு விசாரணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் ஒரு நபருக்கு வருமான வரிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் இன்றி செலுத்தியமைக்காக 10 ஆயிரத்து 500 ரூபாவும் மற்றுமொரு நபருக்கு வருமான வரிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரமின்றி செலுத்தியமைக்காக 6 ஆயிரம் ரூபாவும் மேலும் ஒரு நபருக்கு பாதுகாப்பு தலைக்கவசம் இன்றி செலுத்தியமைக்கு மூவாயிரம் ரூபாவும் ஏனைய நான்கு நபர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரமின்றி செலுத்தியமைக்கு தலா மூவாயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ-9-24)






தேகாரோக்கியம்மிக்க சந்ததியினருக்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களுக்கான மருத்துவ பரிசோதனை இடம்பெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-உ.சாளின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மேற்படிப்பை பூர்த்தி செய்தார் நீதிபதி மா.கணேசராஜா



சர்வதேச உள்நாட்டு இன முரண்பாடுகளும் தீர்வுகளும் சம்பந்தமான சட்ட மேற்படிப்பை நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா பூர்த்தி செய்துள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் உள்நாட்டு சர்வதேச முரண்பாடுகளும் தீர்வுகளும் சம்பந்தமான மேற்படிப்பை கொழும்பு பல்கலைக் கழகத்தில் பூர்த்தி செய்திருந்தார்.

இதன்பேறாக உள்நாட்டு சர்வதேச முரண்பாடுகளும் அதற்கான தீர்வுகளும் குறித்து இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சர்வதேச சட்டம் பற்றிய ஆய்வுகள் என்பன தற்போதைய சட்டமா அதிபர் பாலித பர்னாந்து அவர்களினாலும் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களாலும் பாராட்டுப்பெற்றுள்ளது.

இதேவேளை முரண்பாடுகளும் தீர்வுகளும் குறித்த சட்ட மேற்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நீதிபதிகள் நிறுவத்திற்கும் நீதிபதிகள் பயன்பெறும் பொருட்டு சட்ட சம்பந்தமான ஆய்வுகளையும் சமர்ப்பித்திருந்தார். மேலும் இவர் அமெரிக்க பல்கலைக்கழகமான நொற்றடாம் பல்கலைக்கழகத்தில் சட்டமுதுமாணி பட்டத்தை பூர்த்தி செய்தவர்.

சர்வதேச உறவுகள், சர்வதேச வர்த்தக சட்டம், சர்வதேச குற்றவியல் சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றில் சட்ட மேற்படிப்பை பூர்த்தி செய்து, சட்டமுதுமாணி பட்டத்தையும் பெற்றார் என்பதுடன் லண்டன் மற்றும் தாய்லாந்து நாட்டு சர்வதேச விருதுகளையும் இவர் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# 400 மில்லியன் ரூபா செலவில் கொழும்பு துறைமுகம் அமைப்பு

(கொழும்பு)

கொழும்பு தெற்கு துறைமுகம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இது நாட்டின் முன்னேற்றத்திற்கு பாரிய உந்து சக்தியாக அமையுமென துறைமுகங்கள், நெடுஞ்சாலைதிட்ட அமைச்சர்ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கொழும்பு தெற்கு துறைமுக விஸ்தரிப்பின் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் 25 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் 25 ஆயிரம் கொள்கலன்களை எடுத் துச் செல்லும் பாரிய கப்பல்களும் நங்கூரமி டும் வகையில் கொழும்பு தெற்கு துறைமுகம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக விஸ்தரிப்பு முதற்கட்ட பணிகளுக்கு 400 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் டொலரை கடனாக வழங்கியுள்ளது. துறைமுக அதிகார சபையின் 100 மில்லியன் டொலரும் இதற்காக பயன்படுத்தியுள்ளது.

6.8 கிலோ மீற்றர் நீளமான பிரதான நீர் தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதோடு, 18 மீற்றர் ஆழத்திற்கு நீரேந்து பரப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தினூடாககுறிப்பிட்டளவேகொள்கலன்களைஏற்றி இறக்க முடியும் என்றும் அவர் கூறினார். (அ-2)

# தரம் குறைந்த பெற்றோல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது

## அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா

இறக்குமதி செய்யப்பட்ட 95 ஒக்டெயின் பெற்றோல் 5 ஆயிரம் மெட்ரிக் தொன் தரம் குறைந்தமை பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டதால் அதனை நிராகரித்து திருப்பி அனுப்பியுள்ளோம் என பெற்றோலிய மற்றும் கனியவளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இறக்குமதி செய்யப்பட்ட 95 ஒக்டெயின் பெற்றோல் 5 ஆயிரம் மெட்ரிக் தொன் 2 ஆம் சோதனையின் பின். தரம் குறைந்தது என கண்டறியப்பட்டதால் அதனை நிராகரித்து திருப்பி அனுப்பியுள்ளோம்.

அதனை ஏற்றுக் கொண்ட பெற்றோல் சீனா நிறுவனம் அதற்கு மாற்றாக பெற்றோலை வழங்குவதாக தெரிவித்துள்ளது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட 95 ஒக்டெயின் பெற்றோல் 5 ஆயிரம் மெட்ரிக் தொன் 2 ஆம் சோதனையில் அதனது தரம் உறுதி செய்யப்பட்டதை அடுத்து அதனை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

சில வேளைகளில் அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களில்மாற்றங்கள் ஏற்படுவது துண்டு. அதற்காகவே நாம் இங்கு பரிசோதனைகளை மேற்கொள்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)


## இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப் பெருமானின் வருடாந்த பெருந் திருவிழாவை முன்னிட்டு, சின்மயா மிஷன் யாழ்ப்பாணக் கிளையினால் சைவச்சிறார்களுக்கான மாபெரும் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியது எதிர்வரும் 31-ம் திகதி வரை வலம்புரி நாளிதழில் வரும் கேள்வி, பதில் துணுக்குகளை வெட்டி ஒரு அப்பியாசப்புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி செப்ரெம்பர் 1ஆம் திகதி மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கவும். கையளிக்கப்படும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்குச் சரியான பதிலைச் சொல்லும் அனைவருக் கும் பெறுமதியான பரிசில்கள் பூங்காவனத் திருவிழாவன்று வழங்கப்படும். 18 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இதில் கலந்து கொள்ளலாம்.

**சின்மயா மிஷன்,**
**யாழ்ப்பாணம்.**

(இ)


# வர்த்தக பேரவையில் பங்கேற்க 50 சர்வதேச முதலீட்டாளர்கள் பதிவு

பொதுநலவாய உச்சி மாநாட்டை முன்னிட்டு நவம்பர் 12 முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பில் நடத்தப்படவுள்ள வர்த்தகப் பேரவையில் கலந்துகொள்வதற்காக இதுவரையில் 50 சர்வதேச முதலீட்டாளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்புச்சபை தெரிவித்துள்ளது.

வர்த்தகப் பேரவையில் கலந்துகொள்ள விரும்புவோருக்கு இலங்கை அரசாங்கத்தினால் திறந்த அழைப்பிதழ் விடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொதுநலவாய அமைப்பின் உறுப்புரிமை நாடுகளின் முதலீட்டாளர்களும் மேலதிகமாக சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்களும் இலங்கை வருவதற்கு ஆர்வம் காட்டியிருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

கொழும்பில் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ள வர்த்தக பேரவைக்கு உலகநாடுகளின்முன்னணி வர்த்தக பிரமுகர்கள் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது.

முதலீடுகள்மூலம் இவ்வருடம் 2 பில்லியன் அமெரிக்கபொலர்கள் வருமானமாக கிடைக்குமென ஏற்கனவே திட்டமிட்ட போதிலும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டினூடாக இலங்கைக்கு அதன் இரண்டு மடங்கான 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக கிடைக்க கூடுமெனவும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். இதேவேளை, கடந்தமுறை அவு ஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டின் மூலம் அந்நாட்டிற்கு 10 பில்லியன் அமெரிக்கபொலர்கள் வருமானமாக கிடைத்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால் பொன்னாங்காணி தைலம் வாங்கும்போது வர்ண மூடியில் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் ஒறிஜினல் என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

Manufactured by:
**Sithara Products**
Puttalam Road, Chilaw
(Reg.No: 63 82)
AR/PR/No 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567

(சி/4181)



## கோயில் உதவியாளர் தேவை

இணுவில், திருப்பதி வேங்கடேஸ்வரர் ஆலயத்துக்கு ஆச்சாரமுள்ள கோயில் வேலை தெரிந்த உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரையும் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**கே.கே.எஸ்.வீதி, இணுவில், மருதனார்மடம்.**

(3511)



இவர்களுக்கு **மணமகள் தேவை** | **கல்யாண மாலை** | இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 2<br>உயரம்: 5’6” கி.பா:38<br>தகைமை/தொழில்: A/L,UK Not PR<br>தொ.இ:B2127 | பிறப்பு: 1986 இந்து(V)<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 161 செ.மீ கி.பா: 47<br>தகைமை/தொழில்: AAT<br>தொ.இ:G2095 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 5’7” கி.பா:10.75செவ்4<br>தகைமை/தொழில்: O/L<br>சாரதிதனியார்<br>தொ.இ:B2129 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா:30 செவ் 1<br>உயரம்: 5’4”<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியை<br>தொ.இ:G2135 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்திரம் 2<br>கி.பா : 12.25<br>தகைமை/தொழில்: A/L, College Heavy Duty Mechanicகனடா Citizen<br>தொ.இ:B2131 | பிறப்பு: 1984 இந்து(V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா:15.25 உயரம்: 163செ.மி<br>தகைமை/தொழில்: CIMAவிரிவுரையாளர்<br>தொ.இ:G2160 |
| பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5’6” கி.பா:40.25செவ் 2<br>தகைமை/தொழில்: A/L, IBSL வங்கி உத்தியோகத்தர்Junior Executive<br>தொ.இ:B2130 | பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவாதிரை1<br>கி.பா : 40 உயரம்: 5’6”<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>தொ.இ:G2162 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளின் தலையீட்டால் கல்வித்துறைக்கு மோசமான பாதிப்பு

## கர்தினால் மல்கம் ஆண்டகை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**அரசியல் மற்றும் அரசியல்வாதிகளின் அநாவசிய தலையீடுகளால் கல்வித்துறை இன்று பாரிய சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியதொன்றாகி விட்டது. எனவே கல்வித்துறைக்குள் அரசியல் புகுத்தப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.**

கல்வித்துறைக்குள் ஒழுக்கம் பேணப் படாமைக்கு அரசியல்வாதிகளே முன்னுதார ணமாக திகழ்கின்றனர். அதேபோன்று ஆசியா வின் ஆச்சரியம் என்று கூறும் போது அது பாரிய கட்டடங்களை அமைப்பதால் மட்டும் நிறைவேறி விடப்போவதில்லை என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

சுதந்திரக் கல்வித்துறையானது கூட்டுத் தாபனமாகவும் நிறுவனமாகவும் பின்னர் அரசியல் மயமாகவும் மாற்றியமைக்கப்பட் டுள்ளதால் கல்வித்துறை இன்று பாரிய சவா ல்களை எதிர்கொண்டுள்ளது. அரசியல்வாதி கள் ஆசிரியர்களை மண்டியிடச் செய்யும் நிலைவரை அது கொண்டு சென்றுள்ளது.

பாடசாலை மற்றும் கல்வி எனும் போது ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். எனினும் அதனை இங்கு காண முடியாதிருக்கின்றது. இத்தகைய நிலைமை கள் கல்வித்துறைக்குள் இருந்து விடுபட வேண்டும்.

நாட்டை ஆசியாவின் ஆச்சரியமிக்க நாடாக மாற்றியமைக்கப் போவதாக கூறப்படுகின் றது. ஆசியாவின் ஆச்சரியம் என்று கூறும் போது அது பாரிய கட்டடங்களை அமைப்ப தால் மட்டும் நிறைவேறி விடப்போவதில்லை. மாறாக ஒழுக்கம் நிறைந்த சமய, சமூக, கலா சார அடையாளங்களின் ஊடாகவே எடுத்துக் காட்டப்பட வேண்டும். அப்போதே ஆசியா வின் ஆச்சரியம் என்பது நிதர்சனமாகும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# புலமை பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

கலங்கரை கல்வித்திட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இக் கருத்தரங்கில் ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்ட 300 மாணவர்கள் பங்குபற்ற வுள்ளனர் என சாவகச்சேரி பிரதேச இளை ஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.மதியுகன் தெரிவித்துள்ளார். (ம-37)

# தவறுவிடும் அரசியல்வாதிகளை மக்கள் வீட்டுக்கு அனுப்பலாம்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

தமது தவறுகளை திருத்திக்கொள்ளாது அரசாங்கத்தில் தொடர்ந்து இருப்பவர்களை வீட்டுக்கு அனுப்ப மக்களுக்கு உரிமை உண்டு என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெ ற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறி னார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி.உட்பட எதிர்க்கட்சிகள் பலமிழந்திருப்பதால் அரசாங் கமே, அரசாங்கத்தை விமர் சிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த கட்சிகள் தமக்குள் சண்டையிட்டு கொள்கின்றன. நாட்டில் நடைபெறும் விடய ங்கள் தொடர்பில் முழுமையான விளக்கங் களையோ விமர்சனங் களையோ இவை முன்வைப்பதில்லை.

எதிர்க்கட்சிகள் தமது சிறப்புரிமைகளை அனுபவித்து கொண்டு அரசாங்கத்திற்கு என்ன நடக்க போகிறது என்பதை ஒதுங்கியி ருந்து வேடிக்கை பார்த்து கொண்டிருக் கின் றன. இதனால் அரசாங்கத்தில் இருக்கும் நாமே அரசாங்கத்தை விமர்சிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தவறு செய் யும் அமைச்சர்களும் மக்கள் பிரதிநிதிகளும் உள்ளனர். சுதந்திரக்கட்சியினர் என்ற'வகை யில் அந்த கட்சியில் உள்ளவர்களின் தவறு களைக் சுட்டிக்காட்ட வேண்டியது கட்சியினரின் கடமை. தவறுகளைத்திருத்திக்கொள்ளாதுபோனால் அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்க மக்க ளுக்கு உரிமை உள்ளது என்றார். (அ-2)

# யாழில் நேற்று 5 கட்சிகள் வேட்பு மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட் டியிடுவதற்கான வேட்பு மனுவை முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவைத் தலைவராகக் கொண்ட ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட 5 கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும் நேற்று யாழ். மாவட்ட செயலக த்தில் தாக்கல் செய்தன.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும் நாள் நேற்று நண்பகல் 12.30 மணி யுடன் முடிவடைந்தது.

இருப்பினும் காலை 8.30மணி தொட க்கம் நண்பகல் 12.30மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தில் மட்டும் 5கட்சிகளும் மூன்று சுயேட்சைக் குழுக்களும்வேட்பு மனு வைத் தாக்கல் செய்தன.

இதில் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவைத் தலைவராக கொண்ட ஜனநாயகக் கட்சி சார்பாக முதன்மை வேட்பா ளராக போட்டியிடும் எஸ்.கிருஸ்ணகுமார் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

இதனையடுத்து போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவரான விநாயக மூர்த்தி சகாதேவனை முதன்மை வேட்பாள ராக கொண்ட ஜனநாயக மக்கள் முன்ன ணியினர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த னர்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா மக்கள் கட்சி யின் முதன்மை வேட்பாளர் திலக் உடுகம வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

இதேவேளை எமது தேசிய முன்னணி யின் சார்பில் முதன்மை வேட்பாளராக போட் டியிடும் மீரா லெப்பை லாபிர், ஐக்கிய சோசலிச கட்சி சிறிதுங்க ஜெயசூரிய தலைமையிலான கட்சியினரும் வேட்பு மனுவைத் தாக்கல் செய் தனர். (அ-6)

# குடும்பஸ்தருக்கு பிடியாணை

வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் தாபரிப்பு வழக்கொன்றில் நீதிமன்ற தவணைகளுக்கு சமுகம் அளிக்காமையினால் அக் குடும்பஸ்தருக்கு பருத் தித்துறை நீதிமன்றம் நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பித்துள்ளது. மேற்படி பிரதேசத்தில் தாபரிப்பு வழக்கொன்றில் மனைவியினால் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து ஏற்கனவே பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் குறித்த குடும்பஸ்தர் வழ க்கு தவணைக்களுக்கு சமுகம் அளிக்காமல் முல்லைத்தீவு பிரதேசத்தில் மறைந்து வாழ்ந்து வருவதாகவும் மனைவியால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரம் அக் குடும் பஸ்தரை கைது செய்ய முல்லைத்தீவு பொலிஸாருக்கு பிடியாணை பிரதியை சமர்ப்பித்து மறு தவ ணைக்கு குடும்பஸ்தரை கைது செய்து மன்றில் ஆஜர் படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.(அ-9-24)




வடக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடுவதற்கு 5 கட்சிகளும் 3 சுயேட்சைக் குழுக்களும் நேற்று வேட்பு மனுத்தாக்கல் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் ஆணைக்குழுவை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை

## கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

**காணாமற் போதல்கள் மற்றும் கடத்தல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நிறுவப்படவுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகளை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இவ்விடயம் தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணாமற் போனவர்கள் பற்றிக் கண்டறிவதற்காக இந்த ஆணைக் குழு நியமிக்கப்படவுள்ளது. இந்த விசேட ஆணைக்குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயலாளர் லலித்வீரதுங்கவிற்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

பக்கச்சார்பற்ற குழுவொன்றினால் விசாரணை நடத்தப்படும் வரையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்போ அல்லது தமிழ் மக்களோ இந்த விசாரணைகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

காணாமற் போனோர் பற்றி விசாரணை நடத்த ஆணைக்குழுவொன்றைநியமிக்குமாறு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பரிந்துரை செய்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையில் அரசாங்கம் திடீரென ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான அவசியம் என்ன என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகள் மற்றும் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் இவ்வாறு ஆணைக்குழுவை அமைக்க முனைப்புக் காட்டி வருகின்றது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகள் கடந்த மூன்றாண்டுகளாக அமுல்படுத்தப்படவில்லை.

இந்தப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதாகவும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் தற்போது ஆணைக்குழுக்களை அடுக்கடுக்காக உருவாக்கி வருவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வழக்கு

இலங்கை கடற்படையின் கப்பல் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஆறுபேருக்கு எதிராக சட்டமா அதிபர் நேற்று முன்தினம் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இலங்கைகடற்படைகப்பலானஎஸ்.எல். என்.எஸ்.சயூரா மீது விடுத லைப் புலி உறுப்பினர்கள் பல தடவைகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இக்கப்பல் இராணுவத்திற்கு முக்கிய கருவியாக இருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு நீர்கொழும்புக்குஅருகில்எஸ்.எல்.என்.எஸ்.சயூரா கடற்படைக் கப்பல் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்படுகிறது.

அத்துடன் குறித்த ஆறு முன்னாள் போராளிகளும் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், நீர்கொழும்பு, கொழும்பு, வத்தளை ஆகிய பிரதேசங்களில் வாழும் புலிகளின் தலைவர்களுடன் சதி செய்ய திட்டம் தீட்டியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பில் 68 சாட்சியங்களும் 29 தடயப் பொருட்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். (அ-2)

# நீதியை குழிதோண்டி புதைக்கவே பொதுநலவாய மாநாடு- வைகோ

இந்திய அரசின் தமிழின துரோகத்தைக் கண்டித்தும் இந்திய பிரதமர் மன்மோகன்சிங் தமிழக வருகையை எதிர்த்தும் திருச்சியில் இன்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்எனம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையாளர்களை அனைத்து உலக நீதிமன்றத்தின் குற்றவாளிக்கூண்டில்நிறுத்த வேண்டும்என்ற குரல் தாய் தமிழகத்திலும் தரணி எங்கும் மானஉணர்வு உள்ள தமிழர்கள், மனித உரிமை காப்பாளர்கள் நெஞ்சில் ஓங்கி ஒலிக்கும் நிலையை மாற்றுவதற்காகவே பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை எதிர்வரும் நவம்பர் மாதம் 17,18 ஆம் திகதிகளில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடத்துவதற்கு இந்திய அரசு மிகத்தீவிரமாகச்செயற்பட்டுவருகிறது.

நீதியை புதைகுழிக்கு அனுப்பவே இந்திய அரசும் இலங்கை அரசும் வஞ்சமாகச் செயற்படுகின்றன.

ஈழத் தமிழர்களுக்கும் தாய்த் தமிழகத்துக்கும் மன்னிக்க முடியாத துரோகம் இழைக்கும் இந்தியாவின் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பிரதமர் மன்மோகன்சிங், இன்று தமிழ் நாட்டுக்கு வரவிருக்கிறார். அவரது வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# குற்றம் புரிவோர் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன

## ஜனாதிபதி தெரிவிப்பு

குற்றம் செய்வோர் பற்றிய சகல தகவல்களும் தமக்கு கிடைக்கப் பெறுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் சந்திப்பில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பிரதேச அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் தொடர்பிலான சகல தகவல்களும் எமக்கு கிடைக்கப் பெறுகின்றன.

மக்கள் இந்தத் தகவல்களை எனக்கு வழங்குகின்றனர். குற்றம் செய்வோர் திருந்துவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கிலேயே நான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதிருக்கின்றேன்.

ஆனால் எதிர்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குற்றச் செயல்களில் ஈடுபடாது கிராம மக்களின் இதயங்களை வென்றெடுக்க அரசியல்வாதிகள் பழகிக் கொள்ள வேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் பற்றிய பெயர் விபரங்களை வெளியிட தான் விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கையின் கடற்பரப்பில் மீன்பிடிக்க சீனாவுக்கு அனுமதி?

(கொழும்பு)

இலங்கையின் தெற்கு, வடமேல், மேற்கு கடற்பரப்புக்களில் மீன்பிடியில் ஈடுபடும் உரிமைகளை சீனாவுக்குவழங்கஅரசாங்கம்திட்டமொன்றை செயற்படுத்தி வருகிறது என அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் ரத்னகமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை முதல் புத்தளம் வரை நீண்டு செல்லும் இந்த கடற்பரப்பை சீனாவுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 12 சீன மீன்பிடி படகுகள் பிரதேசத்தில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்ப வசதிகளை கொண்ட சீனாவின் இந்த மீன்பிடி படகுகள் ஒரே நேரத்தில் பெருந்தொகை மீன்களை பிடித்து வருகின்றன.

இதனால் தொழில்நுட்ப வசதிகள் குறைந்த இலங்கை மீனவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு தேவையான மீன்களை கூட பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

சீனாவுக்கு இந்த கடற்பரப்பு வழங்கப்பட்டால் அந்த பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் உள்நாட்டு மீனவர்கள் தமது தொழில்களை கைவிட வேண்டிய நிலைமை ஏற்படும்.

12 மீன்பிடி படகுகளில் ஏற்படுத்தப்படும் அழிவுகள் முழு பிரதேசமும் சீனாவுக்கு வழங்கப்பட்ட பின்னர் நூறு மடங்காக அதிகரிக்கும். தொழில்நுட்ப வசதிகள் இல்லாத மீனவர்கள் ஒரு மீனைக் கூட பிடிக்க முடியாத நிலைமை உருவாகும் என்றார். (அ-2)

# சந்தேகநபரிடமிருந்து கப்பம் பெற்றார் வாஸ்

(கொழும்பு)


சிங்கப்பூர் சரத் என்ற நபரிடம் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன பதினைந்து இலட்ச ரூபா கப்பமாக பெற்றுக் கொண்டார் என புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் குற்றம் சுமத்தியுள்ளனர்.

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவல படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபராக சிங்கப்பூர் சரத் கருதப்படுகின்றார்.

இவரைக் கொலை செய்யாதிருக்க 30 இலட்ச ரூபா கப்பம் வழங்கப்பட வேண்டுமென வாஸ் குணளளளளவர்தன கோரியதாகவும் அதில் 14 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பொறளை மற்றும் கொழும்பு டி.எப். சீ.சீ.வங்கி கிளைகளின் ஊடாக வாஸ் குணவர்த்தனவின் கணக்குகளுக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த வாஸ் குணவர்தனவை மஹர நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.





பம்பலப்பிட்டியைச்சேர்ந்த மொஹமட் சியாம் என்ற பிரபல வர்த்தகரை படுகொலை செய்த சம்பவம் தொடர்பிலான குற்றச்சாட்டின் அடிப்படையில் வாஸ் குணவர்தன தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)





ஜனாதிபதியின் சட்டத்தரணியாக வடமாகாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விழா நாயகனாக கலந்து கொண்ட ஜனாதிபதியின் சட்டத்தரணியும் வித்தியாலய பழைய மாணவனுமான முருகேசு சிற்றம்பலம் உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவின் அதி நவீன ஏவுகணைகள் சில

ஆயுத உற்பத்தியில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் அமெரிக்கா அதி நவீன தொழில நுட்பங்களை புகுத்தி தினமும் பல புதிய ரக ஆயுதங்களை உற்பத்தி செய்துவருகின்றது.

இங்கே உயிரினங்களின் வடிவில் ரோபோவை உருவாக்கியிருக்கிறது அமெரிக்கா. இந்த ரோபோகளில் குண்டுகளைப் பொருத்தினால், இவை குறித்த இலக்கை துல்லியமாகத் தாக்கும் திறன்கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளன.


## விற்பனையில் சாதனை படைத்த கலக்ஸி எஸ் 4

அறிமுகமான இரண்டு மாதங்களிலேயே, சாம்சங் கலக்ஸி எஸ் 4 ஸ்மார்ட் போன் 2 கோடிக்கு மேல் விற்பனையாகி புதிய சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்னர் வெளியான சாம்சங் எஸ் 3 ஸ்மார்ட் போன் விற்பனையைக் காட்டிலும், இதன் விற்பனை 1.7 பங்கு வேகமாகும்.

இப்படியே இதன் விற்பனை தொடருமானால் சாம்சங் நிறுவனத்தின் மிகப் பிரபலமான ஸ்மார்ட் போனாக, கலக்ஸி எஸ்4 பெயர் எடுக்கும்.





இன்றைய உலகில் அறிவியல் தொடர்பான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது தினம் தினம் நாம் ஏதோ ஒரு மாற்றத்தை இந்த உலகில் பார்த்து கொணடே தான் இருக்கிறோம்.

எல்.ஜி யின் புதிய பொக்கெட் சைஸ் பிரிண்டர் நாம் அழகாக மடித்து கையில் எடுத்துக்கொள்ளலாம் அந்த அளவுக்கு கையடக்க பிரிண்டர். மேலும் இது கலர் பிரிண்டர் என்பது கூடுதல் தகவல்.

## பல வசதிகள் கொண்ட Galaxy Note 8.0 டேப்லட்




சாம்சங் நிறுவனத்தினால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட Galaxy Note 8.0 டேப்லட் ஆனது சிறந்த டேப்லட் ஆக காணப்படுகின்றது.

இது 1.6GHz வேகத்தில் செயலாற்றவல்ல Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றினை கொண்டுள்ளதுடன், 8 அங்குல அளவு மற்றும் 1280×800 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

அத்துடன் கூகுளின் Android 4.1 Jelly Bean இயங்கு தளத்தினை அடிப்படையாகக் கொண்ட இந்த டேப்லட்டில் 5 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமெரா மற்றும் 1.3 மெகாபிக்சல்களைக் கொண்ட துணையான கமெரா ஆகியவற்றினையும் உள்ளடக்கியுள்ளன. மேலும் இவற்றின் சேமிப்பு நினைவகமானது 16GB கொள்ளளவுடையது. எனினும் Micro SD கார்ட்டின் உதவியுடன் 64 GB வரை அதிகரித்துக் கொள்ளும் வசதியும் காணப்படுகின்றது.

## குழந்தைகளின் நித்திரைக்கு கார்



கார்கள் மீது அனைவருக்கும் இருக்கும் ஈர்ப்பைவிட குழந்தைகளுக்கு அதிக அளவில் இருப்பதை நாம் காண முடியும். கார்கள் மீது அவர்களுக்கு இருக்கும் இயல்பான ஈர்ப்பை தணிப்பதற்கு கார் பொம்மைகளை வாங்கி கொடுக்கிறோம். அதையும் தாண்டி... ஆம், உங்கள் குழந்தையை குதூகலமாக்கவும், படுக்கையறையை அலங்கரிக்கும் விதத்திலும் காரை போன்ற பல வாகனங்களின் அமைப்புக்களைக் கொண்ட ஏராளமான படுக்கைகள் வெளிவந்துள்ளன. அப்போ இனி குழந்தைகளின் நித்திரை தொட்டிலிலிருந்து காருக்கு மாறப்போகிறதோ...?




## குறைந்த விலையில் அப்பிள் ஐபோன்கள்

அப்பிளின் தயாரிப்பில் உருவான ஐபோன்களுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுகின்றது.

எனினும் விலை அதிகம் என்பதால் அனைவராலும் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.


இதனைக் கருத்திற்கொண்டு அப்பிள் நிறுவனமானது குறைந்த விலை உடைய ஐபோன்களை தயார் செய்வதில் முனைப்புக்காட்டி வருகின்றது. இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் 18ஆம் திகதி இந்த ஐபோன்கள் அப்பிள் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 GB சேமிப்புக் கொள்ளளவு உடைய ஐபோன் ஒன்றின் பெறுமதியானது 349 டொலர்கள் வரையில் இருக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயற்கை வண்ணங்கள்



பள்ளி மாணவர்களான தாராவும், வர்ஷாவும் மாணவன் சூரஜும் ஒரு மாலைப்பொழுதில் சுவாரசியமாக உரையாடிக்கொண்டிருந்தனர். "நாம் ஏற்படுத்தியுள்ள துப்பறியும் சங்கம் உருப்படியாக ஒன்றும் செய்வதில்லை!" என்று புகார் கூறினாள் தாரா.

அவள் சொல்வது நியாயம் தான் என்று வர்ஷாவிற்குப் புரிந்தது. இருப்பினும் "இதோ பார் தாரா! நாம் சலிப்படைந்து முயற்சி செய்வதைக் கை விட்டு விடக் கூடாது. நமது அணுகுமுறையை மாற்றிக் கொள்ள வேண்டும்" என்றாள் வர்ஷா. "அது எப்படி என்று விளக்கிச் சொல்வாயா?" என்று கேட்டான் சூரஜ். மூவரும் ஓர் அரச மரத்தடியின் கீழ் உட்காரந்து பேசிக்கொண்டு இருந்தனர். "விளக்கிச் சொல்ல என்னால் முடிய

**அம்புலிமாமா கதைகள்**

வில்லை!" என்றாள் வர்ஷா! "நான் சொல்கிறேன்! எனக்குப் புரிந்துவிட்டது!" என்ற தாரா, "முதலில் எந்தப் புதிய நபரைக் கண்டாலும் நாம் சந்தேகப் படுவதை விட வேண்டும். இப்படித் தான் போன வாரம் ஒருவனை திருடன் என்று நினைத்து வேவு பார்க்கப் போய் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டோம்" என்றாள். "என்ன செய்வது? அவனைப் பார்த்தால் திருடன் போலத்தான் தோன்றியது!" என்று சூரஜ் கூறிக்கொண்டு இருக்கும் பொழுது திடீரென அந்தப்பக்கம் வினோதமான ஒரு பெண்மணி வந்தாள். மூவரும் உரையாடிக் கொண்டு இருந்தது டில்லியில் ஒரு ஒதுக்குப்புறமான இடம்! நல்ல நண்பகல் நேரம்! பொதுவாக அந்த நேரத்தில் ஆட்கள் நடமாடுவது இல்லை. நடுத்தர வயதான அந்தப் பெண்மணியின் உடையே மிகவும் விநோதமாக இருந்தது. அவள் கால்களில் செருப்பு இல்லை. தோளில் சாக்கு மூட்டை இருந்தது. அந்தப் பெண்மணி ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு தன் தோளிலிருந்த மூட்டையை இறக்கினாள். மூவரும் அவளை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு இருக்கையில் அவள் தன் மூட்டையில் இருந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள். பிறகு சில பழைய போத்தல்களை எடுத்தாள். அவற்றில் பல வண்ணங்களில் சாயங்கள் இருந்தன. பிறகு, ஒரு பெரிய இறகை தனது சாக்கு மூட்டையினுள்ளிருந்து எடுத்தவள் அதை சாயங்களில் தோய்த்து ஏதோ வரையத் தொடங்கினாள்.

சூரஜுக்கு ஏனோ அந்தப் பெண்மணியைப் பார்த்தது முதல் ஒரு மாதிரியான பயம் ஏற்பட்டது. "இவளைப் பார்த்தாலே ஏதோ சூனியக்காரி போல் உள்ளது. போய்



விடலாம் வாருங்கள்!" என்று சூரஜ் பரபரப்புடன் கூறினான். சூனியக்காரி என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பெண்களுக்கும் பயம் உண்டாக மூவரும் அவளைத் தாண்டிக் கொண்டு ஓடினர். அப்போது சூரஜ் தெரியாமல் அவளுடைய மூட்டையின் மீது காலை வைக்க, நிலை தடுமாறிக் கீழே



விழுந்தான். அவன் மீது மோதிக் கொண்டே மற்ற இருவரும் போத்தல்களின் மீது விழுந்தனர். அவற்றிலிருந்த வண்ணச் சாயங்கள் கீழே கொட்டின.

தனது போத்தல்களைக் கவிழ்த்த அவர்களை ஒருகணம் கோபத்துடன் முறைத்த அந்தப்பெண்மணி "என்னுடைய வண்ணச் சாயங்களைக் கொட்டிவிட்டீர்களே!" என்று கூவினாள். உடனே, மூவரும் சுதாகரித்து எழுந்துகொண்டு ஓடினர். "ஓடுங்கள்! ஓடுங்கள்!" என்று கூறிக் கொண்டே சூரஜ் மிக வேகமாக ஓடினான். சற்றுதூரம் சென்ற பின் மூவரும் நின்றனர். "ஐயோ! ஏன் நிற்கிறீர்கள்?" என்று சூரஜ் கேட்டான்.

"சே! நாம் வீணாகப் பயப்படுகிறோம்! அவள் துணிகளுக்கு சாயம் பூசுபவள் என்று தோன்றுகிறது. அதோ, அந்த சாக்குப் பையில் சில துப்பட்டாக்கள் தெரிகின்றன!" என்றாள் தாரா. "துப்பட்டா என்றா சொன்னாய்? அப்படியானால் கிட்டே சென்று பார்க்கலாமே!" என்றாள் வர்ஷா. உடனே, வர்ஷா அந்தப் பக்கம் பெண்மணியை நோக்கி செல்ல, தாராவும் பின் தொடர்ந்தாள்.

"நீங்கள் இருவர் வேண்டுமானால் அவளிடம் செல்லுங்கள்! நான் வர மாட்டேன்! என்றான் சூரஜ். இரு பெண்களும் அந்தப் பெண்மணியின் அருகில் சென்றனர். உன்னுடைய போத்தல்களை நாங்கள் தெரியாமல் கவிழ்த்துவிட்டோம். ஆகையால் எங்களை மன்னித்துவிடு! என்றாள் வர்ஷா! அவர்கள் எதிர்பார்த்தது போல், அந்தப் பெண்மணி அவர்களை கோபிக்கவில்லை.

"பராவாயில்லை!" என்று கூறியவள் கீழே கவிழ்ந்து கிடந்த அனைத்து போத்தல்களையும் நேராக்கினாள். "உன் சாக்குப் பையில் நிறைய துப்பட்டாக்கள் வைத்து இருக்கிறாய் போலிருக்கிறதே! அதை எங்களுக்குச் சிறிது காட்டுவாயா?" என்று தாரா வினயத்துடன் கேட்டாள். "ஓ! காட்டுகிறேனே!" என்ற அந்தப் பெண், மூட்டையிலிருந்து கண்ணைப் பறிக்கும் மிகமிக அழகான பல துப்பட்டாக்களை வெளியில் எடுத்தாள். அவற்றைக் கண்ட தாராவும், வர்ஷாவும் பிரமித்துப்போயினர்.

"இத்தனை அழகான வண்ணங்கள் உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்றாள். வர்ஷா. இந்த சாயங்களை நான் காய்களிலிருந்து தயாரிக்கிறேன்" என்றாள். "அப்படியா? எங்களுக்கு சொல்லித் தருவாயா? என்று தாரா ஆர்வத்துடன் கேட்டாள்.

அவள் ஏதோ சொல்ல வாயெடுத்த போது, திடீரென ஒரு கூச்சல் சத்தம் கேட்டது திரும்பிப் பார்த்தால், சூரஜ் மூன்று உயரமான மாணவர்களுக்கு இடையே சிக்கிக்கொண்டு கத்திக் கொண்டிருந்தான். "ஐயோ! சூரஜ் ரௌடிக் கும்பலிடம் மாட்டிக்கொண்டானே!" என்றாள் வர்ஷா.

"யார் அந்த ரௌடிகள்? வாருங்கள், அவர்களை ஒரு கை பார்க்கலாம்!" என்றுஅந்தப் பெண்மணி சூரஜைநோக்கி விரைவாக நடக்க, மற்ற இருவரும் பின்தொடர்ந்தனர். "அவர்கள் எங்கள் பக்கத்து வீட்டுப் பையன்கள் தான்! ஆனால் அடாவடித்தனம் செய்பவர்கள்! ஹோலிப்பண்டிகை வருகிறதல்லவா! அதற்கு முன்பிருந்தே கண்டவர்கள் மீது தண்ணீரைக் கொட்டி, வண்ணப் பொடிகளைத்தூவி அட்டகாசம் செய்கிறார்கள். இவர்களுடைய தொல்லை தாங்கமுடியவில்லை. இப்போது சூரஜ் மாட்டிக்கொண்டான்!" என்று தாரா கூறினாள்.

"டேய்! நிறுத்துங்கடா!" என்று அந்தப் பெண்மணி போட்ட கூச்சலில் மூவரும் அரண்டு போயினர். ரசாயனப் பொடிகளை மற்றவர் மீது தூவுவது ஆபத்தானது என்று தெரியாதா உங்களுக்கு? அறிவில்லை?" என்று மேலும் கத்தினாள். தொடர்ந்து, "ஹோலி எதற்காக கொண்டாடப்படுகிறது தெரியுமா? வசந்தகாலத்தை வரவேற்பதற்காக அது கொண்டாடப்படுகிறது.

வசந்தகாலத்தில் செடிகளும், கொடிகளும், மரங்களும் பல வண்ண இலைகளுடனும், மலர்களுடனும் மிக அழகாக மாறுகின்றன. இயற்கை அன்னை அவற்றுக்கு அளிக்கும் வண்ணங்களை, நாமும் ஒருவர் மீது ஒருவர் தெளித்து இயற்கை அன்னையை வணங்குகிறோம்.

ஆனால், விருப்பமற்றவர்கள் மீது வண்ணம் பூசுவது தவறு! தவிர, நீங்கள் தூவும் ரசாயனப் பொடிகள் ஆபத்தானவை! இயற்கையே நமக்குப் பல வண்ணங்களை அளித்து இருக்கையில் அவற்றை பயன்படுத்தாமல் தீங்குவிளைவிக்கும் இந்த செயற்கை வண்ணங்களை ஏன் பயன்படுத்துகிறீர்கள்?" என்று கூச்சலிட்டாள்.

உடனே, அந்த மூவரும் அந்த இடத்தை விட்டு அகன்றனர். தாரா, வர்ஷா, சூரஜ் ஆகிய மூவரும் ஒரு



புதிய பாடம் கற்றனர். சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத, உடலுக்கு தீங்கு விளைவிக்காத வண்ணங்களை எப்படித் தயாரிப்பது என்று கற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(நேற்றைய தொடர்ச்சி...)

8. காந்தப் பாய அடர்த்தி B உள்ள சீரான் காந்தப் புலத்திற்கு செங்குத்தாக M திணிவும் q ஏற்றமும் உடைய நேர் அயன் ஒன்று V கதியுடன் நுழைகின்றது. காந்தப் புலத்தின் திசையையும் நேர் அயனில் செயற்படும் காந்த விசையின் திசையையும் படத்தில் குறிக்க.

1. ஏற்றத்தில் செயற்படும் காந்த விசையின் பருமன் என்ன?

2. காந்தப்புலத்தினுள் அயனின் பாதை வட்டமாகும். இதற்கான காரணம் என்ன?

3. அருகில் உள்ள படம் ஒரே மூலகத்தின் வெவ்வேறு சமதானி அயன்களின் திணிவுகளை ஒப்பிடப் பயன்படுத்தப்படும். ஒரு பரிசோதனையில் M திணிவும் ஏற்றம் q உம் உடைய மக்னீசியம் அயன் சூடான முதல் J இலிருந்து மின்னழுத்த வித்தியாசம் V ஆல் ஆர்முடுக்கப்பட்டு பிளவு Kக்கூடாக் கதி v உடன் செல்கின்றது.



சீரான பாய அடர்த்தி B உள்ள நுழைகின்றது. இவ்வயனில் செயற்படும் காந்த குறிக்க.

(i) கதி v க்கு தொடர்பொன்றைப் பெறுக.


(ii) பிளவினூடாக வெளியேறிய அயன் காந்தப்புலத்தினுள் செங்குத்தாக விசையின் பருமன் என்ன? அதன் திசையை படத்தில்

(iii) இவ்வயன் r ஆரையுடைய வட்டப்பாதையில் காந்தப் புலத்தினுள் செல்லின் r க்கு தொடர்பொன்றைப் பெறுக.

(iv) அயனின் திணிவு எனக் காட்டுக. $M = \frac{qB^2r^2}{2}.\frac{1}{V}$

(v) வெவ்வேறு மக்னீசியம் சமதானி அயன்கள் அதே வட்டப்பாதையில் இயங்குவதற்கு வோல்ற்றளவு V மாற்றப்படுகின்றது. இதைச் செய்வதற்கான பரிசோதனை ஒழுங்கை வரைந்து காட்டுக.


(vi) வித்தியாசமான திணிவு M உடைய மக்னீசியம் அயன்கள் L இல் காணப் படும் வோற்றளவு V எனின் M எதிர் 1/V வரைபு அருகில்காட்டப்பட்டுள்ளது. P எனும் புள்ளிக்கொத்த சமதானியின் திணிவு $39.8x10^{-27}kg$ ஆகும். வரைபின் படித்திறனைக் காண்க.




(vii) Q என்னும் புள்ளிக்கொத்த சமதானியின் திணிவைக் காண்க.

பகுதி (a) அல்லது (b) விடையளிக்க.

9. அருகில் உள்ள சுற்றில் உள்ள கலங்கள் புறக்கணிக்கத்தக்க அகத்தடை எடையவை. $A_1$, $A_2$, $A_3$ இலட்சிய அம்பியர்மானிகளும் $V_1$, $V_2$ இலட்சிய வோல்ற்றுமானிகளும் ஆகும்.




(i) இலட்சிய அம்பியர்மானிகள் இலட்சிய வோல்ற்றுமானிகள் என்றால் என்ன?

(ii) (a) அம்பியர்மானி $A_1$ இன் வாசிப்பு என்ன? உமது விடைக்கான காரணத்தைத் தருக.

(b) A, B க்கிடையில் சமானத் தடையைக் காண்க.

(iii) அம்பியர்மானிகள் $A_2$, $A_3$ ஆகியவற்றின் வாசிப்புகளைக் கணிக்க.


(iv) வோல்ற்றுமானிகள் $V_1$, $V_2$ ஆகியவற்றின் வாசிப்புக்களைக் கணிக்க.

(v) (a) சுற்றுக்கு கலவடுக்குகள் வழங்கும் மொத்த வலுவைக் காண்க.


(b) தடைகளில் விரயமாகும் மொத்த வலுவைக் காண்க.

(c) (v)(a), (v)(b) இல் பெற்ற விடைகளிலிருந்து நீர் என்ன முடிவுக்கு வருவீர்?

(vi). வோல்ற்றுமானி $V_1$ க்குப் பதிலாக 12V,21W என வீதம் கணிக்கப்பட்ட மின் குமிழொன்று இணைக்கப்படின் அது முழுவலுவுடன் ஒளிருமா? உமது விடையை விளக்குக.




(b)(i) முன்முகக் கோடலுற்று இருக்கும்போது இருவாயிகளுக்கு குறுக்கே உள்ள வோல்ற்றளவு 0.7V எனின் அருகில் காட்டப்பட்டுள்ள சுற்று ஒரு AND படலையாகச் செயற்படும் என நிறுவுக.





(ii) முன்முகக் கோடலுற்று இருக்கும்போது திரான்சிற்றரின் $V_{BE}$= 0.7V அதன் பெய்ப்பு X5V இற்கோ அல்லது 0V இற்கு தொடுக்கப்படலாம்.

(a) மின்னோட்டநயம் β=100 எனின் பெய்ப்பு வோல்ற்றளவு 5V ஆக இருக்கும் பொழுது அது நிரம்பல் நிலையில் செயற் படுகிறது எனக் காட்டுக.

(b) வோல்ற்றளவுகளைக் கருத்திற் கொண்டு இச்சுற்று NOT படலையாகச் செயற்படுகின்றது எனக் காட்டுக.


(iii)(a) மேலுள்ள இரு சுற்றுக்களும் கீழே உள்ள சுற்றில் காட்டிய வண்ணம் இணைக்கப்படுகின்றன. இச்சுற்று ஒரு NAND படலையாகச் செயற்படும் என நிறுவுக

(b) X=Y=5V எனின் அடி - காலிச் சந்தியினூடான மின்னோட்டத்தைக் காண்க.




(iv) இரு NOT படலைகளை படத்தில் காட்டிய வண்ணம் குறுக்காக இணைப்பதன் மூலம் $Q_1$, $Q_2$ என்னும் இரு பயப்புகளுக்கு உறுதியான தர்க்க மட்டங்களைத் தரும் எனக் காட்டுக.


இவ்விணைப்பில் உள்ள பிரதிகூலம் என்ன?




(v) சுற்று குறுக்காக இணைக்கப்பட்ட இரு NAND படலைகளைக் காட்டுகின்றது. இச்சுற்றின் இரு பெய்ப்புகளும் A, B ஆல் குறிக்கப்படுகின்றன. உண்மை அட்ட வணையின் உதவி கொண்டு இரு உறுதி நிலைகள் உள்ளன எனக் காட்டுக. ஏன் அவை உறுதியாக உள்ளன என விளக்குக. இரு பெய்ப்புகளும் தர்க்கமட்டம் 1 இல் இருப்பதால் எழும் நிலைமையை விமர்சிக்க.

10. பகுதி (a) அல்லது (b) க்கு விடையளிக்க.

(a) $100m^2$ சுவர்ப் பரப்புள்ளதும் சூழலுக்கு திறந்துள்ளதுமான ஒரு சிறிய கட்டடம் 10cm தடிப்புள்ள செங்கற் சுவர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் $3m^2$ பரப்பளவுள்ளதும் 2cm தடிப்புள்ளதுமான ஒருமரக்கதவு $4m^2$ பரப்பளவுள்ளதும் 0.5cm தடிப்புள்ள ஒரு தனிக் கண்ணாடித் தகட்டினால் ஆக்கப்பட்டதுமான ஒரு கண்ணாடி யன்னலும் உடையது. ஒரு வளி சீராக்கியின் மூலம் கட்டடத்தினுள்ளே வெப்பநிலை 25°C இல் பேணப்படுகின்றது. வெளியே வெப்பநிலை 30°C இல் உள்ளது. கட்டடத்தில் பாவுகையினூடாகவும் தரையினூடாகவும் உள்ள வெப்ப இடமாற்றங்களை புறக்கணிக்க.




(i) வெளிச் சூழலிருந்து கட்டடத்திற்குள்ளே வெப்ப இடமாற்றம் யாது?

செங்கல்லின் வெப்பக் கடத்தாறு = $0.6\ Wm^{-1}K^{-1}$

மரத்தின் வெப்பக் கடத்தாறு = $0.1\ Wm^{-1}K^{-1}$

கண்ணாடியின் வெப்பக் கடத்தாறு = $0.8\ Wm^{-1}K^{-1}$

(ii) உருவில் காணப்படுகின்றவாறு யன்னல் தனிக் கண்ணாடித் தகட்டுக்குப் பதிலாக 0.1 cm தடிப்புள்ள ஒரு வளி இடைவெளி இருக்குமாறு ஒவ்வொன்றும் 0.2 cm தடிப்புள்ள இரு கண்ணாடித் தகடுகளினால் செய்யப்பட்டிருக்கின்றது எனக் கொள்க. இம்மாற்றம் காரணமாக யன்னலினூடாக வெப்ப இடமாற்ற வீதம் என்ன சதவீதத்தால் இழக்கப்படும்?

வளியின் வெப்பக் கடத்தாறு = $3x10^{-2}Wm^{-1}K^{-1}$

(iii) கட்டடத்தின் பனிபடுநிலை 20°C ஆக இருக்கும் அதேவேளை வெளியே பனிபடுநிலை 25°C ஆகும். வெளியே தொடர்பு ஈரப்பதன் 80% எனில் கட்டடத்தினுள்ளே உள்ள தொடர்பு ஈரப்பதனைக் காண்க.

20°C யிலும் 30°C யிலும் உள்ள நிரம்பலாவி அமுக்கங்கள் முறையே 16mmHg, 30mmHg ஆகும்.

(b)(i) உலோக மேற்பரப்பொன்றில் மின் காந்த கதிர்ப்பு படும்போது இலத்திரன்கள் காலப்படலாம். இது ஒளிமின் விளைவாகும்.

ஐயன்சைரனின் ஒளிமின் விளைவுச் சமன்பாட்டினைத் தந்து அதில் உள்ள ஒவ்வொரு உறுப்பும் எதை குறிக்கின்றது என விளக்குக.

(ii) குறித்தவொரு உலோகத்தில் படும் கதிர்ப்பின் அதிர்வெண் குறித்தவொரு பெறுமானத்திலும் பெரிதாக இருந்தால் மட்டுமே ஒளி மின்விளைவு நடைபெறும். இது ஏன் என விளக்குக.

(iii) காலல்ப்படும் ஒளி இலத்திரன்களின் உயர்கதி படும் கதிர்ப்பின் செறியில் தங்கியிராது. இது ஏன் என விளக்குக.

ஆகன் இலேசர் (LASER) ஒளியின் அலைநீளம் $4.83x10^{-7}$ m. இக்கற்றையின் வலு 100mW. இக்கற்றை ஒளிமின்கலம் ஒன்றின் சீசயம் கதோட்டில் படுகின்றது.

(i) இலேசர் ஒளி என்றால் என்ன? இவ்வொளிக்கும் சாதாரண ஒளிக்குமிடையில் உள்ள வேறுபாடுகள் என்ன?

(ii) இலேசர் கற்றையின் போட்டோன் காலும் வீதத்தைக் காண்க.

(iii) போட்டோன்களின் 10% இலத்திரன்களை வெளியேற்ற முடியும் எனின் ஒளிமின்னோட்டத்தைக் காண்க.

(iv) சீசயத்தின் நுழைவாயில் மீடிறன் $5.2x10^{14}$Hz எனின் ஒளி மின்னோட்டத்தை நிறுத்துவதற்கு கலத்தின் மின்வாய்களுக்கு குறுக்கே பிரயோகிக்க வேண்டிய மறையான மின்னழுத்த வித்தியாசத்தைக் காண்க.

(v) காலப்படும் இலத்திரன்களின் உயர்கதியைக் காண்க.

பிளாங்கின் மாறிலி=$6.6x10^{-34}$Js ஒளியின் கதி=$3x10^8ms^{-1}$

இலத்திரன் ஏற்றம்=$1.6x10^{-19}$C இலத்திரன் திணிவு=$9.1x10^{-31}$Kg

(iv) கம்பி $W_1$ இல் வெவ்வேறு திணிவு M ஐ தொங்கவிடுவதன் மூலம் BC க்கிடையில் உள்ள கம்பியின் இழுவை T ஐ மாற்றலாம். அக்கம்பியின் அதிர்வெண் f இழுவை T க்கு இடையில் தொடர்பென்ன?

(v) கம்பி $W_2$ வில் XY க்கிடையில் உள்ள நீளம் $L_0$ $W_1$ இன் நீளம் $l_0$ உடன் அடிப்படையில் பரிவுறும் நீளமாகும்.

(a) $L_0$ ஐ அளப்பதற்கான பரிசோதனையைச் செய்முறையைத் தருக.

(b) கம்பி $W_1$ இன் BC க்கிடையில் உள்ள நீளம் $\ell_0$ மாறாது பேணி வெவ்வேறு இழுவை T க்கும் கம்பி $W_2$ உடன் அடிப்படையில் பரிவுறுகின்ற ஒத்த நீளம் $L_0$ அளக்கப்படுகின்றது. கீழ் உள்ள வரைபுகளை பருமட்டாக வரைக.


(i) $L_0$ எதிர் T (ii) $\frac{1}{L_0}$ எதிர் $\sqrt{T}$

(vi) M = 4 kg, m = 4 x$10^{-3}$ $kgm^{-1}$, $\ell_0$ = 12.5 cm எனின் கம்பி $W_2$ இன் அடிப்படை அதிர்வெண் என்ன?

(vii) (vi) இல் கம்பி $W_2$ இன் நீளம் $L_0$ = 20.2 cm, XY க்கிடையில் உள்ள நீளம் 20.0 cm ஆகக் குறைக்கப்பட்டு இரு கம்பிகளும் ஒரே நேரத்தில் அருட்டப்படின் என்ன நடைபெறும் என விளக்குக.

4. (i) G தடையுள்ள ஒரு இயங்கு சுருள் கல்வனோமானி அதனூடாக மின்னோட்டம் $I_G$ க்கு முழு அளவுத் திட்ட திரும்பலைத் தருகின்றது. இதை மின்னோட்டம் I (>$I_G$) முழு அளவுத்திட்டத்தை வாசிப்பதற்கு தேவையான தாழ்தடை S ஐ இணைக்கவேண்டிய விதத்தை சுற்றில் வரைந்து S க்கான தொடர்பைப் பெறுக.

(ii) ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் பல்மானியின் சுற்றுவரிப்படத்தை படம் காட்டுகிறது. $S_1$, $S_2$, $S_3$, $S_4$ தாழ்தடைகள் $R_1$, $R_2$, $R_3$ உயர் தடைகள் R மாறும் தடையி கல்வனோமானியின் தடை G. சுழலிச் சாவி P, A யில் உள்ளபோது பல்மானி அளக்கும்மின்னோட்டம் I க்கு தொடர்பொன்றைப் பெறுக.




(iii) காட்டப்பட்டுள்ள பல்மானியின் அகத்தடை 25 Ω அதன் முழு அளவுத்திட்டத் திரும்பல் மின்னோட்டம் 1 mA . கலத்தின் அகத்தடை புறக்கணிக்கப்படும். மின்னோட்டத்தையும் அழுத்த வித்தியாசத்தையும் தடையையும் அளப்பதற்கு A, B, C, D, E, F, G ஆகிய நிலைகளில் ஏதாவதொரு புள்ளிக்கு சுழல் சாவி P ஐ திசைப்படுத்தி அளக்கலாம்.

(a) மின்னோட்டத்தை அளப்பமதற்கு இதனைப் பயன்படுத்திய போது சுழலிச் சாவி எந்நிலைகளில் இருத்தல் வேண்டும்? எந்நிலையில் உயர் மின்னோட்டத்தை அளக்கலாம்?

(b) மின்னழுத்த வித்தியாசத்தை அளப்பதற்கு சுழலிச் சாவி எந்நிலைகளில் இருத்தல் வேண்டும்? எந்நிலையில் உயர் அழுத்த வித்தியாசத்தை அளக்கலாம்?

(iv) (a) தடையை அளப்பதற்கு எந்நிலையில் சுழலிச் சாவி இருத்தல் வேண்டும்?

(b) $R_{XY}$ = 0 எனின் பல்மானி முழு அளவுத்திட்ட திரும்பலைக் காட்டுகின்றது. R இன் பெறுமானம் என்ன?

(c) $R_{XY}$ = 0 என்னும் நிலையை செயல்முறையில் எவ்வாறு அடைவீர்?

(d) தடையியொன்றின் தடை X இன் பெறுமதியை அளப்பதற்கு அதை XY க்கு குறுக்கே இணைத்தால் மின்னோட்ட அளவிடையில் 0.2 mA எனின் தடை X இன் பெறுமானம் என்ன?

(v) இம்மானியால் அளக்கக்கூடிய வோல்ற் அளவிடை வீச்சுகள் 0 - 2.5 V, 0 - 10V ஆயின் $R_1$, $R_2$ க்கு பெறுமானங்களைக் காண்க. இக்கணிப்புகளுக்கு $S_1$, $S_2$, $S_3$, $S_4$ இன் விளைவுகளைப் புறக்கணிக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெரோயின் கடத்திய பெண்ணுக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இடுப்புப் பட்டிகளில் ஹெரோயினை மறைத்து கடத்தி வந்த இலங்கைப் பெண்ணுக்கு நீர்கொழும்பு மேல்நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

நீர்கொழும்பு மேல் நீதிமன்ற எம்.எம்.ஏ.கபூர் குறித்த மரண தண்டனையை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

நீண்ட வழக்கு விசாரணையின் பின் 8 வருடம் விளக்கமறியலில் இருந்த நிலையில் இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் திகதி இந்தியாவிலிருந்து இப்பெண்மணி கட்டுநாயக்க விமான நிலையம் வந்திறங்கியபோது இவரில் சந்தேகம் கொண்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் இவரது பொதிகளை சோதனை செய்த போது இவர் கொண்டுவந்த பயணப் பையில் இருந்து 474 இடுப்புப் பட்டிகளில் சூசகமான முறையில், ஹெரோயின் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவற்றில் சுத்தமான 141.8 கிராம் ஹெரோயின் இருந்ததாக தெரிய வந்தது.

இவர்மீது போதைப்பொருளைக் கடத்தி வந்தமை, தன்வசம் வைத்திருந்தமை, வியாபாரம்செய்கின்றமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் மீது வழக்குத் தொடரப்பட்டன. குற்ற வாளியாகக் காணப்பட்ட இவருக்கு மேல் நீதிமன்ற நீதிபதி மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-2)

# இலங்கை பிரஜைகள் இத்தாலியில் கைது

(கொழும்பு)

இத்தாலியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களை கொள்கலன்களில் வைத்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்க முயற்சித்த இரண்டு இலங்கைப் பிரஜைகள் இத்தாலிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் சிலாபம் தங்கொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இவ்வாறு இலங்கைக்கு அனுப்பி வைக்கவிருந்த 20 மோட்டார் சைக்கிள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வருடம் நாபோலி பகுதியில் 400 மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டிருந்தன. எனினும் பொலிஸாரினால் திருடியவர்களைக் கைது செய்ய முடியவில்லை.

இந்த நிலையில் இத்தாலியின் பிற நகரங்களில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் கொள்கலன் பெட்டிகளை சோதனையிட பொலிஸார் தீர்மானித்துள்ளனர். (அ-2)

# என்னை கொலை செய்ய முயற்சித்தார்கள்

## மாலக சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இனந்தெரியாத நபர்கள் தம்மை கொலை செய்ய முயற்சித்தார்கள் என அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக சில்வா தெரிவித்துள்ளார்.

தம்மை படுகொலை செய்யும் திட்டத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகர மண்டபத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பிரபல ஆடை வர்த்தக நிலைய வாகனத் தரிப்பிடத்தில் வைத்து மாலக மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மாலக காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தம்மை 12 பேர் கொண்ட குழுவொன்று தாக்கியதாகவும் இது ஓர் வெட்கம் கெட்ட செயல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

திரைப்படங்களில் வருவதனைப் போன்று நான் சுப்பர் ஹீரோ கிடையாது என மாலக சில்வா குறிப்பிட்டார். (அ-2)

# அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடக விழா யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

எண்பதுகளில் தமது மொழிபெயர்ப்பு நாடகங்களின் மூலம் ஈழத்தமிழ் நாடகப் புலத்திற்கு பெரும் பணியாற்றிய நாடக நெறியாளர் க.பாலேந்திராவும் அவரது அவைக்காற்றுக் கலைக்கழகத்தினரும் தமது 35 ஆவதுஆண்டுநிறைவைக்கொண்டாடும் முகமாக லண்டனில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்கள்.

இவர்களது ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாடக விழாவொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ் விழாவில் கண்ணாடி வார்புகள், பாடம், சம்மந்தம் ஆகிய மொழிபெயர்ப்பு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. இந்நாடக விழாவிற்கான அனுசரணையை திருமறைக் கலாமன்றம் தேசிய கலை இலக்கியப் பேரவை, சப்தமி கலையகம் ஆகியஅமைப்புக்கள் வழங்குகின்றன.

தற்போது லண்டனை தளமாகக் கொண்டு செயற்பட்டு வரும் அவைக்காற்றுக் கலைக்கழகம் கடந்த 35 ஆண்டுகளாக இலங்கை உட்பட பல்வேறு நாடுகளிலும் நூற்றுக் கணக்கான நாடக மேடையேற்றங்களை மேற்கொண்டு உலகளாவிய தமிழ் நாடக ரசிகர்களின் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ)

# ஆஸி. செல்ல முற்பட்ட 70 பேர் கைதாகினர்

(மட்டக்களப்பு)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட 70 பேரை வாழைச்சேனை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

படகின் மூலம் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு சென்று கொண்டிருந்த போது இவர்களை கடற்படையினர் கைது செய்து திருகோணமலைக்கு கொண்டு சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு நகரில் நான்கு வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவை சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவுக்கு செல்வதற்காக ஆட்களை ஏற்றிச் சென்ற வாகனங்களாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)




* 1610 - ஹென்றி ஹட்சன் தனது கடற் பயணத்தின் போது இன்றைய ஹட்சன் குடாவை அடைந்தார்.
* 1790 - ஐக்கிய அமெரிக்காவில் முதற் தடவையாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.
* 1798 - பிரெஞ்சுப் புரட்சிப் போர்கள்: நைல் நதிப் போரில் பிரித்தானியா வெற்றி பெற்றது.
* 1870 - உலகின் முதலாவது சுரங்க தொடருந்து சேவை லண்டனில் தொடங்கப்பட்டது.
* 1931 - இராணுவ வேலைகளை நிராகரிக்குமாறு அறிவியலாளர்களுக்கு ஐன்ஸ்டைன் அழைப்பு விடுத்தார்.
* 1932- பொசித்திரன் (இலத்திரனின் எதிர்த் துணிக்கை) கார்ல் ஆண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
* 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் ஜனாதிபதியானார்
* 1939-அணு ஆயுதத்தை தயாரிக்க அறிவுறுத்துமாறு ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டிற்குக் கடிதம் எழுதினார்கள்.
* 1945-இரண்டாம் உலகப் போர்: தோல்வியடைந்த ஜேர்மனியின் எதிர்காலம் குறித்து விவாதித்த நட்பு அணி நாடுகளின் பொட்ஸ்டாம் மாநாடு நிறைவடைந்தது.
* 1989 -யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
* 1990 -ஈராக் குவைத்தின் மீது படையெடுத்தது.

**பிறப்புகள்**

* **1913-தனிநாயகம் அடிகளார், உலகத் தமிழாராய்ச்சி மன்றம் அமைக்க அடிகோலியவர்**
* 1926 - ஜோர்ஜ் ஹப்பாஷ், பாலஸ்தீனத் தலைவர்

**இறப்புகள்**

* 1860 - சேர் ஹென்றி வோர்ட், இலங்கையின் முன்னாள் பிரித்தானிய ஆளுநர்
* 1922-அலெக்சாண்டர் கிரஹம் பெல், தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் (பி. 1847)
* 1923 - வோரன் ஹார்டிங், ஐக்கிய அமெரிக்காவின் 29ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1865)

### சேவியர் தனிநாயகம் அடிகள்



சேவியர் தனிநாயகம் அடிகள் 1913ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில், ஊர்காவற்றுறையில் கரம்பொன் என்ற கிராமத்தில் நாகநாதன் ஹென்றி ஸ்ரனிசுலாசு, சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளை ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவர் ஈழத்தின் தமிழறிஞர் மற்றும் கல்வியாளர் ஆவார்.

கத்தோலிக்க குருவான 1964 ஆம் ஆண்டு ஜனவரியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க அடிகோலினார். இதன்போது டில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை மகாநாட்டில் உலகெங்கும் இருந்து கலந்து கொண்ட அறிஞர்களைத் திரட்டி "உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்" என்ற நிறுவனம் அமையக் கால்கோள் இட்டார்.

தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரை

கல்வியியல் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கல்வியியலில் முனைவர் பட்டத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுக் கொண்டார். பின்னர் மலேசியாவில் உள்ள மலாய் பல்கலை க கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

மேலும் தமிழ் இலக்கியக்கழகத்தை ஆரம்பித்து தமிழ், தமிழ்சார்ந்த ஆங்கில நூல்கள் பலவற்றை வெளியிட்டார். தொடர்ந்து பல தமிழ்ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

தமிழ் மொழியையும் அதன் இலக்கியச் செழுமையையும் உலகில் பரப்பும் நோக்கோடு ஜப்பான்,

ஆண்டிலேயே 200க்கும் மேற்பட்ட பேருரைகளை நிகழ்த்தி சாதனை புரிந்தார். அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார்.

இவ்வாறுதமிழின் வளர்ச்சியில் தன் வாழ்நாளை அர்ப்பணித்த தனிநாயகம் அடிகள் 1980ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி உடல் நலிவுற்ற நிலையில் இன்னுயிர் நீத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு கொல்லியம்பாவை



ஆன்மீகம் 76

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

அசுரர் காலம் பிறக்கப் போகிறது என்ற செய்தியை அறிந்தவுடன் அவர்களின் வசம் இம்மருந்துகள் கிடைத்தால் அவர்களின் பலம் பலமடங்காக பெருகிவிடுமே. இதனால், நல்லவர்கள் நலிந்து போவார்களே! நாடு நாசமாகுமே என்று அஞ்சி தெய்வீகக்காலம் பிறந்த பின்னர் இவை நாட்டுக்கு உதவட்டும் என்று முடிவு செய்து அவைகளை இதுபோன்ற குகைகளில் மறைத்துவைத்துவிட்டு மறைந்தார்கள் என்ற செய்தியை சித்தர் அவர்கள் என்னிடம் முன்பே கூறியிருந்தார்கள். அந்த நினைவில் மூழ்கி இருந்த என்னை நெருங்கிய சித்தர் பெருமான், “ராஜா நான் தேடிய பத்து மாணவர்களை தேர்ந்தெடுத்து விட்டேன். என்னுடைய காலமான கொங்கணர் ஆட்சிவிரைவில் துவங்கப்போகிறது! நூற்றிருபது ஆண்டு காலம் ஆட்சி நடக்கும் அப்போது, நான் தேர்தெடுக்கும் என் பிள்ளைகளால் உலக அதிசயங்களை நடத்திக் காட்டுவேன். அகிலமே இது கண்டு வியந்து நிற்கும். வெளிநாட்டினர் நம் நாட்டின் நன்மைக்காக பல பொருட்களை கொண்டு வந்து குவிப்பார்கள். பூமியில் இந்திர, மகேந்திர ஜாலங்களை என் பிள்ளைகள் விளையாட்டாக செய்வர். பூமியிலிருந்து பத்தடி உயரத்தில், அந்தரத்தில் தவம் செய்யும் வித்தைகளை நடத்திக்காட்டுவர். மூலிகைகள் பேசும், அவைகளின் சாபம் தீரும். பட்டமரம் துளிர்க்கும், மரங்களும் பேசும், மாதம் மும்மாரி தவறாமல் மழைபெய்யும். மக்கள் உழைப்பினாலே உயர்வர். உண்மையாக வாழ்வார்கள். சுருக்கமாக சொன்னால் மனிதர்கள் மனிதர்களாக வாழ்வர்!” என்றார்.

இது கேட்ட நான் என்னையறியாமல்! “சாமி! இந்த மக்களா நன் மக்களாகப் போகிறார்கள். இது எப்படி சாத்தியமாகும்?” என்றேன்! அது கேட்டு குழந்தை போல் உடல் குலுங்கி நகைத்த சித்தர் அவர்கள், உன் அச்சம் நியாயமானதுதான்! இன்றைய மனிதர்கள் தெய்வத்தை கும்பிடுவதும் ஏன்? சுயநலம் தான் இவைகளுக்கு அடிப்படை! தான் செல்வந்தனாக வேண்டும். தன் காரியம் வெற்றி பெறவேண்டும். உடல்நோய் குணமாக வேண்டும். என்பது போன்ற வேண்டுதல்களுக்காக மனிதன் இயலாமையில் வேறுவழியின்றி தெய்வங்கள்ள வேண்டிக் கொள்கின்றார்கள். இதனால் தான் கோயில்களையும், தெய்வத்தையும் சரணடைகிறார்கள். வேண்டியது நடந்துவிட்டால் நேர்த்திக் கடன் கடவுளுக்கு தங்கள் வேண்டுதலை நிறைவேற்றுகின்றனர். இதை நேர்த்திக் கடன் என்று குறிப்பிடுவதைக் காணும்போது காரியம் நிறைவேற்றியவருக்கு கூலியாக கடன் பாக்கி தீர்ப்பதுபோல் வேண்டுதல்ல நிறைவேற்றுகின்றனர். இங்குதான் திக்கற்றவர்ளுக்கு தெய்வம் துணை, மலரடி சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது,



கொல்லி மலையில் ஆகாச அருவியின் ஓரம் பாறையில் அன்னதானம்.

என்ற பெரியோர் வாக்கு உயிர் பெறுகிறது. மாலைகள் போடுவதும், மண்டல விரதமிருப்பதும், மொட்டை அடித்துக் கொள்வதும், அலகு குத்திக் கொள்வதும், தங்கத் தேர் இழுப்பதுவும், மனித அவயங்களை வெள்ளியிலோ, பொன்னிலோ செய்து போடுவதும்- தாலியை கழற்றி உண்டியலிலே போடுவதும், கத்தைகத்தையாக கரன்சி நோட்டுக்களை திருப்பதி பழனி உண்டியல்களுக்கு உண்ணக் கொடுப்பதுவும் நடைபெறுகின்றன.

இதை செய்தால் இதை கொடுப்பேன், என்று பேரம் பேசி திரிவதை வேண்டுதல் என்கிறார்கள். எந்த மனிதனும் கடவுள் பக்திக்காக இறைவனை வணங்குவதில்லை. எல்லாமே சுயநல நோக்கத்தின் விளைவுகள் தான்!

தொடரும்

# நாகர்கள் இலங்கையின் பழங்குடி மக்கள்

நாகர், இயக்கர், இனங்களே இலங்கையின் வரலாற்றைத்தொடங்கி வைத்தவர்கள் என்ற கருத்தை கல்வெட்டு ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன. மகிந்தன் (கி.பி 956-972) கல்வெட்டொன்று மஹிந்ததேரரால் வெல்லப்பட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட இயக்கர்களால் காவல் செய்யப்பட்ட திசவாபி பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும் கர்மவிபங்க எனும் சமஸ்கிருதப் பௌத்தநூலும் இயக்கர்களை மஹிந்த தேரர் வென்றார் எனக் குறிப்பிடுகின்றது. சங்கத் தமிழ்இலக்கியமான புறநானூறும் (71:14) இயக்கன் என்ற சொல்லை ஆட்பெயராகக் குறிப்பிடுகின்றது.

நாகர், வடக்கே இமயம் வரையும்தெற்கே இலங்கை வரையும் கிழக்கே பர்மா முதலிய தென்கிழக்காசிய நாடுகளைக் கடந்து பசுபிக் தீவுகள் வரையும் பரவியிருந்தனர். அவர்கள் வகுத்த எழுத்துமுறையே நாகரி, நகரி என்ற பெயரிலும் தேவநாகரி என்ற பெயரிலும் அழைக்கப்பட்டது. வடதிசைச் சமஸ்கிருதமும், பிற வடதிசைத் தாய்மொழிகளும் எழுதப்படும் எழுத்து வடிவு இதுவே.

நாகர் என்பவர்கள் தமிழ் இலக்கியங்களிலும் இலங்கை இலக்கியங்களிலும் குறிப்பிடப்படும் பழங்குடி மக்களாவர். நாகர்களின் நாடு நாகரிகமும் செல்வவளமும் நிரம்பியது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. நாகர்கள் நாக பாம்பை வழிபட்டு வந்தவர்கள். இயக்கர்கள் இறந்த மூதாதையரை வழிபட்டு வந்தவர்கள். அச்சத்தின் காரணமாக இந்த வழிபாடு தொடங்கியிருக்கலாம். இந்த வழிபாடு தமிழர்கள் மத்தியிலும் பரவலாகக் காணப்படுகின்றது.

மேலே குறிப்பிட்டவாறு சங்க காலத்தில் நாகர் இனத்தைச் சேர்ந்த பல புலவர்கள் இருந்திருக்கிறார்கள். புறத்திணை நன்னாகனார், மருதன் இளநாகனார், முரஞ்சியூர் முடிநாகராயர், வெள்ளைக்குடி நாகனார்,சங்கவருணர் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.முடிநாகர் இனத்தைச் சேர்ந்த முரஞ்சியூர் முடிநாகராயர் சேரமன்னான உதியஞ்சேரலை பாடியிருக்கின்றார். இவர்கள் நாகவுருவைத் தலையில் அணிந்ததால் முடிநாகர் என்றும் சூட்டுநாகர் என்றும் அழைக்கப்பட்டனர். தமிழ்நாட்டில் உள்ள நாகர்கோயில் பாம்பையே மூலவராகக் கொண்ட கோயில் ஆகும்.

தமிழ் நாட்டில் திருவேற்காட்டில் எழுந்தருளியுள்ள கருமாரியம்மன் கருநாகமாக தோன்றினார் என்று தலபுராண வரலாறு கூறுகிறது. இங்கு கருமாரியம்மன் ஐந்துதலை நாகத்தின் குடை நிழலில் அமர்ந்து காட்சி தருகிறார். திருச்செங்கோடு மலைச்சரிவில் 60 அடி நீளத்தில் பாம்பு புடைப்பு சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது. இங்கு பக்தர்கள் பொங்கலிட்டு வழிபாடு நடத்துகின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு சமுதாயத்தினர் நாகத்தை குலதெய்வமாக கொண்டு ஒடுப்பறை என்ற இடத்தில் கோயில் கட்டி வழிபடுகின்றனர். மறவர்,ஒளியர், எயினர், ஓவியர், அருவாளர், பரதவர் என்போர் பழம் நாகக் குடிவழிவந்த தமிழ் குடிகளே ஆவர். தமிழக வரலாற்றின் படி நாகர்கள் சங்க காலத்துக்குப் பின் பழந் தமிழ்க் குடிகளுடன் ஒன்று கலந்துவிட்டனர்.

நாகர் வழிபாட்டு முறைமை சைவ மதத்துடன் ஒன்று கலக்க ஆரம்பித்தன. மேலும் இலங்கை நாகர்கள் தமிழக அரசுகளுடன் தொடர்புடையவர்கள் என்பதை மகாவம்சம் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

மகாவம்சம் மட்டுமன்றி தொலமியின் இலங்கைப் படத்தின் புவியியல் குறிப்புகளும் சான்றுகளாக அமைகின்றன. தொலமியின் புவியியல் படத்தின்படி இலங்கையின் வடமேற்கு, வடக்கு, வடகிழக்குப் பகுதியூடாக தென்கிழக்குப் பகுதிவரை நாகர்கள் தம் செல்வாக்கை நிலைநாட்டியிருந்தனர் என்பது தெரிகின்றது. அன்று நாகர்களும் பழந்தமிழர்களும் பரவி வாழ்ந்த பகுதிகளே இன்றும் தமிழர்கள் பரம்பரை பரம்பரையாக வாழும் தமிழ்ப்பகுதிகளாகக் காணப்படுகின்றன. நாகநாட்டு நாக அரசன் வலைவாணன் என்பவன் மகள் பீலிவளை என்பவளைச் சோழநாட்டு மன்னன் வடிவேற்கிள்ளி காதல் மணம் புரிந்தான் என்கிறது மணிமேகலை. அதே மணிமேகலை சாவகநாட்டை ஆண்ட பூமிசந்திரனும் அவன் வளர்ப்பு மகனான புண்ணிய ராசனும் நாக மரபினர் என்று கூறுகிறது.

மணிமேகலை, ஆதிரையின் கணவன் சாதுவன் பற்றி கதையைக் கூறுகிறது. அவன் தீய ஒழுக்கம் கொண்டு கணிகை ஒருத்தியுடன்வாழ்ந்து வந்தான். அவனுடைய பொருள்கள் தீர்ந்த பின் கணிகை அவனை வீட்டை விட்டு வெளியேற்றினாள். சாதுவன் பொருள்ஈட்டுவதற்காக வணிகர்களுடன் கப்பலில் சென்றான். கடும் காற்றால் கப்பல் கவிழ்ந்தது. சாதுவன் தப்பி நாகர்கள் வாழும்மலைப்பக்கம்சேர்ந்தான். கப்பலில் தப்பிய சிலர் காவிரிப் பூம்பட்டினம் வந்தனர்.

சாதுவன் உயிரோடு இருப்பதை அறியாத் அவர்கள், அவன் இறந்து விட்டதாகக் கூறினர்.



அதனைக் கேட்ட ஆதிரை தீயில் பாய்ந்து உயிர்விடத்துணிந்தாள். தீயில் குதித்தாள். ஆனால், தீ அவளைச் சுடவில்லை. ஆதிரை தீயும் சுடாத பாவியானேன் என்று வருந்தினாள். அப்போது உன் கணவன் இறக்கவில்லை. விரைவில் திரும்புவான் என அசரீரி கேட்டது. ஆதிரை மகிழ்ச்சியோடு வீடு திரும்பி நல்ல அறங்களைச் செய்து வந்தான்.

கடல் கொந்தளிப்பிலிருந்து உயிர்தப்பி நாகர்மலையைச் சென்றடைந்த சாதுவனை நாகர்கள் பிடித்து அவனை உண்ண முயன்றனர். சாதுவன் நாகர்மொழியை அறிந்திருந்ததால் நாகர்களின் தலைவனோடு பேசி அவர்களுக்கு கொல்லாமை அறத்தை அறிவுறுத்தினான். நல்வினை, தீவினை ஆகியன பற்றி விளக்கமாகக் எடுத்துரைத்தான். நல்லறிவு பெற்ற நாகர் தலைவன், சாதுவனுக்குப் பொன்னும் பொருளும் அள்ளிக்கொடுத்தான். அவற்றைப் பெற்று அங்கு வந்த சந்திரதத்தன் கப்பலில் சாதுவன் மீண்டான். ஆதிரை கணவனோடு மகிழ்ச்சியாக வாழ்ந்தாள்.

நாலைக்கிழவன் நாகன் என்ற மறவர் கோமான், பாண்டிய அரசனிடம் அமைச்சனாகவும் அவன் படைகளின் தலைவனாகவும் பணியாற்றினான். குதிரைமலையை ஆண்ட பிட்டங்கொற்றன் , என்ற மற்றறொரு தலைவன் சேர அரசனிடம் பணியாற்றினான்.

பரதவர் கடற்கரையில் மீன் பிடித்தும் வணிகம் செய்தும் வாழ்ந்த நாக வகுப்பினர் ஆவர். அவர்கள் முத்தும் சங்கும் எடுக்கக் கடலில் மூழ்கினர். அவர்கள் தென்பாண்டி நாட்டில் கொற்கையைச் சூழ்ந்த இடத்திலேயே மிகவும் வலிமை மிக்கவர்களாக இருந்தார்கள். நாகர்கள் பல கலைகளில் திறமையுடையவர்கள். குறிப்பாக நெசவுக் கலையில் கலிங்கநாட்டு நாகர் புகழ் பெற்றிருந்தனர்.

பாகம் 05

நாகர்கள் ஒரு காலத்தில் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய பரப்பின் பெரும்பகுதியையும் ஆண்டார்கள். அவர்கள் இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ளார்கள். வடக்கில் உள்ளநாகலாந்துநாகர்களது சொந்தநாடாகும்.

நாகர், நாகம், நாகரிகம் போன்ற சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்களே. நாகர் நாடு என்பது குமரிக்கண்டத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து பின்னர் அடுத்தடுத்து நிகழ்ந்த கடற்கோளால் அழிந்துபட்டது என்பதைப் பல்வேறு தமிழிலக்கியங்கள் வாயிலாக அறியலாம். கீழ்த்திசையிலிருந்த நாகர்நாடு பற்றி மணிமேகலை,நாகத்தை வழிபட்டும் நாக இலட்ச்சினையைக் கொண்டிருந்தும் வாழ்ந்திருந்தவர் என்று கூறுகின்றது.

நகரம்- நாகரிகம்-நாகம்-நாகர் போன்ற அனைத்துத் தமிழ்ச்சொற்களும், நகர் என்ற மூலத்தமிழ்ச் சொல்லினின்று பிறந்தவைகளே. நாகர்கள், அழிந்துபட்ட நாகநாட்டுத் தமிழ் மக்களின் இன வழியினரேயாவர்.

அக்காலத்தில் வட இந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிட இனத்தாருக்கு அசுரர் என்று பெயர் இருந்தது. அசுரர்களில் ஒரு பிரிவினர் நாகர் என்பவர். நாகர் ஆதிகாலத்தில் தமிழ் நாட்டிலும் இருந்ததை, சங்க நூல்களிலிருந்து அறிகிறோம். அசுரரும், அவரின் ஒரு பிரிவினரான நாகரும், வருணன் என்னும் தெய்வத்தை வழிபட்டனர். முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் முடிநாகர் சேரமன்னனை உதியஞ்சேரலை பாடியதை குறிப்பிடுகின்றனர். இவர்கள் நாகவுருவை தலையில் அணிந்ததால் இவர்கள் முடிநாகர் என்றும் சூட்டுநாகர் என்றும் அழைக்கப்பட்டனர்.

இணையம் முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிக்கொடியுடன் ஓடியவரின் கடவுச்சீட்டை பறிமுதல் செய்க

## கொழும்பு நீதவான் உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய இராச்சியத்தில் கார்டிஃப் நகர மைதானத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது புலிக்கொடியுடன் ஓடியவரின் கடவுச்சீட்டை பறிமுதல் செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய அண்மையில் உத்தரவிட்டார்.

யசோதார சடாச்சரமூர்த்தி எனும் பெயரில் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி பெற்றுக்கொண்ட கடவுச்சீட்டையே பறிமுதல் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அவருக்கு எதிரான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தர விட்டுள்ளார்.

இந்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே வழக்கை ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி வரையிலும் நீதவான் ஒத்திவைத்தார்.

சம்பியன் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் கடந்த ஜூன் மாதம் 20 ஆம் திகதி கார்டிஃப் நகர மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது மைதானத்திற்குள் புலிக்கொடியுடன் ஓடியவரையே கைது செய்யுமாறு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்ட திறந்த பிடியாணையை கடந்த 3 ஆம் திகதி பிறப்பித்தார்.


இந்நிலையில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அவர் வருகைதந்தால் கைது செய்யுமாறு கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை உத்தரவிட்ட நீதவான் சிவப்பு அறிவிப்பு விடுத்துள்ளார்.

புலிக்கொடியுடன் மைதானத்திற்குள் ஓடி குழப்பம் விளைவித்தவருக்கே இவ்வாறு சிவப்பு அறிவிப்பு விடுக்கப்பட்டு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவருக்கு எதிரான வழக்கும் ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)

# பரதநாட்டிய அரங்கேற்றம்

யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரி யின் மாணவி பிருந்தா ரவீந்தினி யூட் சாந்தராஜின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கொழும்பு நாட்டியக் கலாம ந்தீர் ஸ்தாபகர் ஸ்ரீமதிவாசுகி ஜெகதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)



இலங்கை தொழில் தருநர் சம்மேளனம் மற்றும் யாழ்ப்பாணக் கைத்தொழில் துறை மன்றம் இணைந்து நடத்திய பயிற்சிப் பட்டறையில் சித்தி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் ஞானம்ஸ் விடுதியில் நடைபெற்றது. இலங்கை தொழில் தருநர் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான தகவல் தொழில்நுட்ப பயிற்சி நெறியில் சித்திபெற்ற மாற்றுத் திறனாளி ஒருவருக்கு சான்றிதழை யாழ். முகாமையாளர் சம்மேளன இணைப்பாளர் வி.நிறஞ்சன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கை அகதிக்கு 11 வருட கடூழிய சிறை

(சென்னை)

இலங்கையின் அகதி ஒருவருக்கு, தமிழகம் நாகபட்டின நீதிமன்றம் 11 வருட கடூழிய சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

வெடிபொருட்களை கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே குறித்த தண்டனை நேற்றுமுன்தினம் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதியன்று குறித்த நபர் வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டார்.

இதன்போது இவர் வைத்திருந்த செய்மதி தொலைபேசி, டெட்டினேட்டர் குச்சிகள், ஜெலிக்னைட் குச்சிகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

இவற்றை இவர் இலங்கைக்கு கடத்தவிருந்தார் என்று விசாரணைகளில் இருந்து தெரிய வந்தது. (அ-2)


# ஓகஸ்ட் மாத ஜோதிலிங்க இரதபவனியில்

# சமூக நல நிகழ்வுகள்-01




ஜோதிலிங்க தரிசனம் வாழ்க்கையின் தீராத துன்பங்களைப் போக்கும் வல்லமை வாய்ந்தது. எந்த முயற்சியையும் இலகுவானதாக ஆக்கி விடுகிறது. மனதில் எழும் எண்ணங்களைக் கைகூடச் செய்யக் கூடியது.

சோமநாதர், காசி விஸ்வநாதர், இராமேஸ்வரர்
ஆகிய ஜோதிலிங்கங்கள்
**07-08-2013 தொடக்கம் 27-08-2012 வரை**
ஒரே சமயத்தில் மூன்று வெவ்வேறு பிரதேசங்கள் ஊடாக
**யாழ் குடாநாட்டிலும் கிளிநொச்சிப் பகுதியிலும்**
திருப்பவனி வர இருக்கின்றன.

## துன்பம் போக்கும் அஷ்ட சக்திகள்
20 நிமிட விளக்கம்

சிரமம் என்று கூறி நல்ல இலக்குகளைத் தவிர்ப்பது மன விரக்தியின் விளைவாகும். மனச்சோர்வைப் போக்கி மனவலிமையைத் தரும் அஷ்ட சக்திகளைப் பற்றிய விளக்கம் ஜோதிலிங்க தரிசன இரதங்கள் தரித்து நிற்கும் ஆலயங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆர்வத்தையும் உற்சாகத்தையும் மேலும் பெருக்கிக் கொள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தவர் அன்புடன் அழைக்கிறோம். விபரங்களுக்கு 077-2612088


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அணு தொழில்நுட்பத்தின் நன்மைகளும் தீமைகளும்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

முதல் அணுகுண்டால் தாக்கப்பட்ட ஜப்பானிய வைத்தியர் Dr. Michihiko Hachiya தனது அனுபவம் பற்றி விபரிக்கையில்,

"அன்று அதிகாலை மருத்துவமனைக்கு செல்வதற்காக மருத்துவமனைக்குரிய



எரிகாயத்துக்கு உள்ளான பெண்

உடையணிந்து புறப்பட்ட சமயம், யுத்த அபாயச் சங்கு ஊதியது. அதனைத் தொடர்ந்து பறக்கும் விமானச் சத்தம் கேட்டது. திடீரென மாபெரும் மின்னல் போன்றதொரு ஒளி கண்ணைப் பறித்தது. அதனைத் தொடர்ந்து ஒரு பாரிய ஒலிச்சத்தம் காதை



முதுகில் சவுக்கால் அடித்தது போல் காயம்பட்ட பெண்

அடைத்தது. தோட்டத்தில் தெங்கிக்கொண்டிருந்த உலோக விளக்கு என்றுமில்லாத பிரகாசத்தில் ஒளிர்ந்தது. வெளிச்சமயமாய் இருந்த வானத்தில் திடீரென இருள் பரவியது. அருகில் இருந்த வீட்டுத் தூண் ஒன்று திடீரென உடைந்து விழுந்ததால் வீட்டுக் கூரை அபாயநிலையில் தொங்கிக்கொண்டிருந்தது. இதனால் அச்சமடைந்து வீட்டிலிருந்து தப்பி வீதிக்கு வந்தபோது மரக் கம்பங்களும் இடிந்த கட்டடக் கழிவுகளும் குப்பைகளும் வீதியில் தாறுமாறாகக் கிடந்தன. இவற்றைத் தாண்டி தோட்டத்திற்குள் ஓடியபோது ஏதோ தாங்கமுடியாத களைப்பு ஆட்கொண்டது. ஒரு கணத்தில் அணிந்திருந்த உடைகள் யாவும் கிழித்தெறியப்பட்டன. உடலின் வலதுபுறம் முழுவதும் ஆங்காங்கே வெட்டப்பட்டு இரத்தம் வழிந்தோடியது. கூரிய ஒரு நீண்ட இரும்பு ஆணி தொடையைக் குத்திக் கிழித்து தாங்க முடியாத வலியை ஏற்படுத்தியது. கன்னங்கள் இரண்டும் கிழிந்ததால் வாய் இரத்தத்தால் நிரம்பியது. கழுத்தில் குத்திய ஓர் உடைந்த கண்ணாடித் துண்டை கையால் எடுக்க முனைந்தபோது கை பதறியது." எனத் தொடர்ந்து கூறிச் செல்கிறார். தனக்கு இவ்வளவு காயங்கள் ஏற்பட்ட போதிலும் இந்த வைத்தியர்தான் காயப்பட்ட நூற்றுக் கணக்கான ஜப்பானிய மக்களுக்கு சிகிச்சை செய்திருக்கின்றார்.

அணுகுண்டு வெடிப்பை நேரில் அனுபவித்த Tsutomu Yamaguchi என்பவர் தனது அனுபவத்தை விபரிக்கையில்,

"திடீரென magnesium தீப்பிழம்பு போன்றதொரு ஒளிமயமான தீப்பிழம்பு மின்னல் வெட்டியது போல வெட்டியது. தொடர்ந்து ஒரு பேரிடிச் சத்தம் கேட்டது. இதன்போது இரண்டு அடி உயரமளவிற்கு தூக்கி வீசப்




பட்டேன். அடுத்துப் பயங்கரமான காற்று வீசியது. பேயடித்ததுபோல் வீதியில் மயங்கிக் கிடந்தேன். மயக்கம் தெளிந்து எழுந்த போது இருள் சூழ்ந்திருந்தது. கண்ணுக்கு எதுவும் புலப்படவில்லை. தூசிக் குப்பைகள் தொடர்ந்து வேகமாக வீசிக் கொண்டிருந்தன. சற்று



1945 August இல் கிரோசிமா நகரம்

நேரத்தில் இருட்டுக்கு கண் பழக்கப்பட்டதும் சூனிய வெளி தெரிந்தது. எங்கு பார்த்தாலும் உடைந்த பொருட்கள் சிதறிக் கிடந்தன. நகர்ப்புறமாகப் பார்த்தால் எங்கு பார்த்தாலும்



தாக்குதலுக்குள்ளான கிரோசிமா நகரம்

உடைந்த பொருட்கள் சிதறிக் கிடந்தன. நகர்ப்புறமாகப் பார்த்தால் பிரமாண்டமான ஓர் இராட்சதக் காளான் (Mushroom) வடிவில் புகைக் கூட்டம் தென்பட்டது. அது பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாகத் தோன்றியது. இவ் விராட்சதக் காளான் வடிவில் தோன்றிய புகைமண்டலம் சுற்றியுள்ள பொருட்களின் நிறத்தை தொடர்ந்து மாற்றிய வண்ணம் இருந்தது. முகத்திலும் கையிலும் நெருப்புப் பற்றியிருந்தது. மிகவும் வலுவில்லாமல் அருகிலிருந்த உருளைக்கிழங்கு வயலை நோக்கி நடந்தும் ஊர்ந்தும் சென்றேன். அப்போது பயங்கரத் தாகம் எடுத்தது. எதிரே சில வாலிபர்கள் நிர்வாணமாகக் கிழிந்த துணிகளுடன் காணப்பட்டனர். அவர்கள் யாவரும் வெளுத்துப் போய் பயத்தால் நடுங்கியபடியிருந்தனர். அவர்களின் உடல் முழுவதும் ஏற்பட்ட வெட்டுக் காயத்திலிருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. கொதிக்கும் எண்ணெயில் போட்டதுபோல் அவர்களின் மேனியெங்கும் சிவந்திருந்தது. அவர்களின் முதுகில் சாட்டையால் அடித்தது போன்ற காயங்கள் காணப்பட்டன." எனத் தனது பயங்கர அனுபவத்தை கூறுகின்றார்.


ஹிரோசிமா மற்றும் நாகசாகியில் உயிர பிழைத்தோரில் பலர் கதிரியக்க நோய்களின் (Radiation Sickness) தாக்கத்திற்கு உள்ளானார்கள். கதிரியக்கத் தாக்கத்தின் அறிகுறிகளாக தலைச்சுற்று, மயக்கம், வயிற்றுவலி, சத்தி, பசியின்மை, கடும் காய்ச்சல், வலுவின்மை, தோலில் சிவப்புப் பொட்டுக்கள், உடல் வீக்கம், அல்சர்,இரத்தக் கசிவு, தலைமயிர் உதிர்தல் என்பன தென்படத் தொடங்கின. மிக மோசமாகக் கதிரியக்கத்தால் தாக்கப்பட்டவர்கள் சில மணித்தியாலங்களில் அல்லது சில நாட்களில் இறந்துபோயினர். மிகையாகக் கதிரியக்கம் (Radiation Dose) பட்டோரின் இரத்தத்திலுள்ள வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கை (White Blood Cells) மிகவும் தாழ் மட்டத்திற்குக் குறைந்தது. ஓரளவு கதிரியக்கத் தாக்கத்திற்கு உள்ளானவர்கள் மெல்ல மெல்ல மரணத்தை நோக்கி

திருமதி F.செல்வலட்சுமி
B.Sc (Hons), P.G.D.E. (Merit)
ஆசிரியர்,
யாழ்.வேலணை மத்திய கல்லூரி

சென்றுகொண்டிருந்தனர்.

நேரடியான காமாக் கதிர்த் தாக்கத்திற்கு (Direct Gamma Radiation) உள்ளானவர்களின் கதிரியக்கம் பட்ட உடற்பகுதிகள் அவிந்து ஆறாத புண்களாகி மிகுந்த வேதனையைக் கொடுத்தன. இறுதியாக இவ்வுடற் பகுதிகளின் பெரும்பாலான தசைகள் அழிந்துபோனதால் அதிக இரத்தக் கசிவு (Hemorrhage) ஏற்பட்டு மரணத்தைத் தழுவவேண்டியிருந்தது.

போர் முடிவடைந்த பின்னர் ஹிரோசிமா மற்றும் நாகசாகி நகரங்களில் உயிர் தப்பியவர்களை ஓ - சுயல பரிசோதனைக்கு உட்படுத்திய போது, ஆயிரக்கணக்கானோருக்கு புற்றுநோய் (Cancer) , லுக்கீமியா (Leukemia) மற்றும் முலைப்புற்று




நோய் என்பவற்றின் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டது.

1997ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட Atomic Energy of Canada Ltd எனும் நிறுவனத்தில் Health and Environmental Sciences க்குப் பொறுப்பான சிரேஷ்ட விஞ்ஞானியான Dr. Norman Gentner என்பவரின் அறிக்கையின்படி, 1950ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இரு நகரங்களிலும் 15 ஆயிரத்து 405 பேர் புற்று நோய்த் தாக்கத்தினாலும் 249 பேர் லுக்கீமியா நோயினாலும் இறந்து போயுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம் மரணங்கள் இன்னமும் பல்லாண்டு காலத்திற்குத் தொடரும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.(தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 89

அமெரிக்கா தனது முதல் அணுகுண்டுச் சோதனையை நியூமெக்சிக்கோ நகரில் Trinity எனும் இடத்தில் அமைந்திருந்த அணுகுண்டுச் சோதனைத் தளத்தில் நிகழ்த்தியது. இச்சோதனைக்குத் தலைமை தாங்கிய அணுகுண்டின் பிதா என அழைக்கப்படுபவரின் பெயர் என்ன?

புதிர் 89 இற்கான விடைகளை 12.08 .2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

திரு.அ.குகன்
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்

**புதிர் 88 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.அரசேஸ்வரன்
கலைமகள்வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்

**புதிர் 88க்கான கேள்வியும்-விடையும்:**

Rader என்பதன் விரிவு யாது?

Radio Direction and Ranging

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 89

சரியான விடை:-..........................................

முழுப்பெயர்:-..........................................

முகவரி:-..........................................

தொ.பேசி இல:..........................................

கையொப்பம்:..........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தனை நோக்கி...


## காவடி பவனி





தமிழகத்திலே ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு முருகன் ஆலயங்களிலே பக்தர்கள் காவடி எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றி வருகின்றனர்.
இங்கே அலை மோதும் பக்தர்களின் கூட்டத்தினுள்ளே அடுக்கடுக்காய் பவனி வரும் காவடிகளையும், காவடி பவனி வரும் வீதி ஒன்றிலே இந்திய இராணுவ வீரர்கள் அணி வகுத்து நிற்பதையும் படங்களில் காணலாம்.

# சூரியனின் புதிய புற உருவத்தை வெளியிட்டது அமெரிக்காவின் 'நாசா'



அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் சூரியனின் பிரத்தியேக புதிய படத்தை வெளியிட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் மூலம் அதிகம் அறியப்படாத இன்டர்பேஸ் ரீஜியன் என்னும் பகுதியை ஐரிஸ் கருவியைப் பயன்படுத்தி இந்தப் படத்தை எடுத்துள்ளது.

இந்த புதிய புகைப்படம் இதுவரை வெளிவராத பிரத்தியேக படம் என்ப தால் பல ஆராய்ச்சிக்கு உதவும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஐரிஸ் என்று அழைக்கப்படும் இன்டர்பேஸ் ரீஜியன் இமே ஜிங் ஸ்பெக்ட்ரோ கிராஃப் மூலம் படம் எடுக்கப்பட்டுள்ளது. ஸ்பெக்ட்ரோகிராஃப் இல் உள்ள அல்ட்ரா வயலட் டெலஸ்கோப் மூலம் சூரியனின் வெளிப்புற தோற்றமும் படம் எடுத்து வெளியிடப்பட்டுள்ளது.

### பாகிஸ்தான் முன்னாள் இராணுவத் தளபதி

# முஷாரப்பின் வீட்டைத் தகர்க்க தலிபான்கள் திட்டம்!

பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பர்வேஸ் முஷாரப் தங்கியுள்ள வீட்டை தகர்க்க தலிபான் போராளிகள் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அவர் ஜனாதிபதியாக இருந்தபோது தலிபான் போராளிகளுக்கு எதிரான போக்கை கடைபிடித்ததால், அவரைக் கொல்ல நடைபெற்ற 3 தாக்குதலில் இருந்து முஷாரப் தப்பியது குறிப்பிடத்தக்கது.

வடமேற்கு பாகிஸ்தானின் கைபர் பக்துன்கவா மாகாணத்தில் உள்ள தேரா இஸ்மாயில் கான் நகர் மத்திய சிறையில் திங்கட்கிழமை நள்ளிரவு தலிபான்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் சிறைக்காவலர்கள், பொலிஸார் உட்பட 14 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் 250 தலிபான்கள் சிறையில் இருந்து தப்பிவிட்டனர்.

இந்தக் தாக்குதலுக்கு தெஹ்ரிக் -இ-தலிபான் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த நிலையில், முன்னாள் ஜனரிதிபதி முஷாரபை குறிவைத்து அவர் தங்கியுள்ள சௌக் ஷாஸாத் வீட்டை தெஹ்ரிக்-இ-தலிபான் மற்றும் சிபா-இ-ஷகாபா ஆகிய இரண்டு அணிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை தகவல்கள் தெரிவிக் கின்றன.

பல்வேறு குற்ற வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட முஷாரப்பை, சிறையில் அடைக்க நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 20இல் உத்தரவிட்டது. இதையடுத்து அவர் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், அவர் தங்கியிருக்கும் வீட்டை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த தலிபான் போராளிகள் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை தகவல், சம்பந்தப்பட்டதுறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தாக்குதல் நடத்த வருவோர் பாதுகாப்பு படையினர்போல் மாறுவேடத்தில் வர வாய்ப்புள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

**சிறை தகர்ப்புக்கு ரூ.1 கோடி செலவு:**

தேரா இஸ்மாயில்கான் நகர் மத்திய சிறையைத் தகர்க்க ஒரு மாதம் திட்டமிட்டதாகவும், இதற் காக ரூ.1 கோடி (இந்திய பணம்) செலவிட்டதாகவும் இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ள தெஹ்ரிக- இ-தலிபான் அமைப்பின் தலைவர் அத்நன் ரஷீத் தெரிவித்துள்ளார்.

இந்தக் தாக்குதலுக்கு மார்க்-இ-நிஷாத் என்று பெயரிட்டதாகவும், மீட்கப்பட்ட எங்களது நண்பர்கள் வடக்கு வஜிரிசிஸ்தான் பகுதி யில் உள்ள மில்அலியில் பாதுகாப்பான இடத்துக்கு சென்றுவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தலிபான்களின் முக்கிய கொமாண்டர்களான ஹாஜி அப்துல் ஹக்கிம், ஹாஜி இலியாஸ், வாலித் அக்பர் ஆகியோர் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், சிறையில் இருந்து தப்பிய 252 கைதிகளில் 45 பேரை பொலிஸார் புதன்கிழமை கைது செய்துள்ளனர். மேலும், பலரைத் தேடிவருவதாகக் கூறப்படுகிறது.

### இங்கிலாந்தின் குட்டி இளவரசரின்

# பாதுகாப்புக்கு தனிப் படை

இங்கிலாந்து இளவரசர் வில்லியமின் மகன் ஜார்ஜ் அலெக் சாண்டர் லூயியை ஆயுதம் ஏந்திய 50 பொலிசார் 24 மணி நேரமும் பாதுகாக்கவிருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

இங்கிலாந்து இளவரசர் வில்லி யமின் மனைவி கேட் அழகான ஆண் குழந்தையை கடந்த 22ஆம் திகதி பெற்றெடுத்தார். அந்த குழந் தைக்கு ஜார்ஜ் அலெக்சாண்டர் லூயி என்று பெயர் வைத்துள்ள னர். இந்நிலையில் குழந்தை ஜார்ஜை பாதுகாக்க 50 பொலிசார் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 24 மணிநேரமும் ஆயுதம் ஏந்தி ஜார்ஜை பாதுகாக்கும் பணியில் ஈடுபடவிருக்கின்றனர். இளவரசர் ஜார்ஜ் தனது பெற்றோருடன் 19ஆவது நூற் றாண்டில் கட்டப்பட்ட அன்மர் ஹாலில் பெரும்பாலான நேரத்தை செலவிட விருக்கிறார்.

தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள பொலிசார் குட்டி இளவரசரை பாதுகாப்பதுடன் பிற பணிகளிலும் ஈடுபடுவார்கள் என்று கூறப்படுகிறது.



# அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் பாகிஸ்தானில்

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி நேற்று பாகிஸ்தான் வந்தடைந்தார். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நவாஸ் ஷெரீப், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி மற்றும் இராணுவ தளபதி அஷ்ஃபக் கயானி ஆகியோருடன் அவர் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

தீவிரவாதிகளை ஒழிக்கிறேன் என்று பேச்சளவில் கூறிக்கொண்டிருக்காமல் உண்மையிலேயே தீவிரவாதிகளை களையெடுக்கும் வேலையில் பாகிஸ்தான் அரசு மும்முரமாக ஈடுபடவேண்டும் என அவர்களிடம் ஜோன் கெர்ரி வற்புறுத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.




பாகிஸ்தான் வந்துள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெர்ரி இஸ்லாமாபாத்தில் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை சந்தித்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் 29-வது புதிய மாநிலமாக தெலுங்கானா !







இந்தியா 1947 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பேரரசிடம் இருந்து சுதந்திரம் அடைந்த பிறகு, ஹைதராபாத்தின் முஸ்லீம் மன்னனான நிஜாம் ஹைதராபாத்தை விசேட சிறப்பு விதிகளின் கீழ் ஒரு சுதந்திரமான மாநிலமாக்கப் பட வேண்டுமென்று விரும்பினார்.

அம்மாநிலத்தின் மக்கள் தொகையில் 93 சதவீதமான இந்துக்கள், நாட்டுப்பற்றுள்ள சில முஸ்லீம்களினது உதவியுடன் ஒன்றிணைந்த இந்தியா என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

காங்கிரஸ், ஆர்யா சமாஜ் கட்சிகளின் தலைவர்கள் இவ்வியக்கத்தில் முழுமனதோடு தங்களை ஈடுபடுத்தினர். கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்குடன் விவசாயிகள், நிலப்பிரபுகளுக்கெதிராக தம்மால் நடத்தப்பட்ட ஆயுதப்போராட்டத்தை அடக்க முயன்ற நிஜாமுக்கு எதிராக, புரட்சி செய்தனர்.

நிஜாமின் ஆட்சி தொடரவேண்டுமென்று காசிம் ரஷ்வி தலைமையில் முஸ்லிம் தனியார் இராணுவம் சண்டையிட்டு, மக்களை பல கொடு மைகளுக்கு ஆளாக்கியது. இதனால், ஆட்சியிலிருந்த காங்கிரஸ், தனது படையை 1948 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஹைதராபாத்துக்குள் அனுப்பி ஹைதராபாத்தை விடுவித்தது.

கம்யூனிஸ்ட்களால் தொடங்கப்பட்ட புரட்சி, 1946 இலிருந்து 1951 வரை நீடித்தது. ஹைதராபாத், தெலுங்கு பேசும் ஒன்பது மாவட்டங்களையும் 4 கன்னட மாவட்டங்களையும் 4மராட்டி பேசும் மாவட்டங்கையும் உள்ளடக்கியது. 1978 இல் ரங்காரெட்டி மாவட்டம் ஹைதராபாத்-தெலுங்கானவிலிருந்து பிரிக்கப்பட்டது. தெலுங்கானாவில் அப்பொழுது 10 மாவட்டங்கள் இருந்தன. அச்சமயம் அது, 1950 இல் சென்னை, பம்பாய் மாநில அரச ஊழியர்களால் நிர்வகிக்கப்பட்டது.

1952 இல் முதல்முதலாக ஜனநாயக ரீதியான தேர்தல் மூலம் பி.ராம கிருஷ்ணராவ் ஹைதராபாத்தின் முதல் மந்திரியாக மக்களால் தேர்வு செய்யப் பட்டார். அச்சமயம் அங்கே சென்னை, பம்பாய் அதிகாரிகளை திருப்பியனுப்புமாறு வன்முறைகள் வெடித் தன. அவ்வன்முறையை அடக்குவதற் காக முல்க்கி சட்டம் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டம் 1919 இலிருந்து அதாவது, பிரிட்டிஷ் காலத்திலிருந்து ஹைதராபாத் மாநிலச் சட்டத்தின் பகுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

1953 இல் முதல் தடவையாக மொழி அடிப்படையில் ஹைதராபாத்தில் இருந்து பிரிந்து ஆந்திராவுடன் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட மாநிலமாக பின்பு அது திகழ்ந்தது.

1952 இல் அங்கே மாணவர்களால் புரட்சி தொடங்கப்பட்டது. அதாவது, சுதேசியரல்லாத ஆந்திராக்காரர்கள் அதிக வேலைவாய்ப்புகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்கிறார்கள்; தெலுங்கான மக்கள் அடக்கப்படுகிறார்கள் என்ற அடிப்படையில் இப்போராட்டம் நடத்தப்பட்டது. இந்த மாணவர் போராட்டத்தின் போது, ஏழு மாணவர்கள் காவல்துறையினரின் துப்பாக் கிச் சூட்டுக்குப் பலியாகினர். இச்சம்ப வம் போராட்டம் தீவிரமடைவதில் மேலும் பங்குகொண்டது.

1953 இல் போதி சிறி ராமன்நாயுடு புதிய மாநிலக் கோரிக்கையை முன் வைத்து உண்ணா விரதப் போராட்டத்தில் இறங்கினார். தொடர் உண்ணா விரத மிருந்த அவர், 53 வது நாள் தெலுங் கானாவுக்காக தனது உயிரை அர்ப் பணித்தார்.

1953 இல் ஆந்திரமாநிலம் இணைந்த-ஹைதராபாத் மாநிலக் கலப்புக்கு - மத்தியில் காங்கிரஸ் முடிவு செய்த போது, அம்முடிவை, தெலுங்கானா எதிர்த்தபோதும் ஹைதராபாத்தின் முதல்வர் ராமகிருஷ்ணா ராவ் காங்கிரசுக்கே ஆதரவாக இருந்தார்.

இணைப்புத் திட்டத்தை ஏற்று ஆந்திரா சட்டசபை, தெலுங்கானாவின் நலன்களைப் பாதுகாப்பதாக உறுதி செய்யும் ஒரு தீர்மானத்தை 1955 இல் நவம்ரில் நிறைவேற்றியது.

இதன் தொடர்ச்சியாக,1956 பெப்ரவரியில் தெலுங்கான தலைவர்களுக்கும் ஆந்திரா தலைவர்களுக்கும் இடையில் தெலுக்கான நலன்களைப் பாதுகாப்பதற்கான உடன்பாடு எட்டப்பட்டது.

இறுதியாக (1956 நவம்பர்) மாநிலங்கள் புனரமைத்தல் செயற்பாட்டின் கீழ் ஹைதராபாத்திலுள்ள தெலுங்கு பேசும் பிரதேசங்கள் ஆந்திராவோடு இணைக்கப்பட்டது.

ஹைதராபாத்தின் தலைநகரம் ஆந்திராவிற்கும் தலைநகரமாக்கப்பட்டது.

ஆண்டுகள் கழிகையில் மேற்படி ஒப்பந்தம் தோல்விகண்டபோது 1969 இல் மக்கள் தெலுங்கான போராட்டத்தைத் தொடக்கினார்கள்.

தெலுங்கான மாநிலத்தை தனிமாநிலமாக்க வேண்டும் என்று சென்னா ரெட்டி போராட்டத்தை தொடக்கி வைத்தார். இப்போராட்டம் தொடர்ந்து தீவிரமடைகையில் முன்னணிவகித்த மாணவர்களில் 300பேர்கள், காவல்துறையால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தெலுங்கானாவை மிரள வைத்ததுடன் போராட்டம் அதிதீவிரம் அடையவும் வாய்ப்பளித்தது.

இந்நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்காக இருதரப்பு (தெலுங் கானா, ஆந்திரா) தலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின் 1969 ஏப்ரலில் இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி 8 அம்ச திட்டம் ஒன்றைக்கொண்டு வந்தார்.

தெலுங்கானா தலைவர்கள் இத்திட்டத்தை தீவிரமாக எதிர்த்ததுடன் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

தெலுங்கானா போராட்டம் தொடர்ந்ததை அடுத்து, ஆந்திராவில் ஜெய் ஆந்திரா என்னும் இயக்கம், தெலுங்கானா போராட்டத்துக்கு எதிராக முடுக்கிவிடப் பட்டது.

இரண்டு பகுதி மக்களினதும் பிரச்சினைகளை தணிக்கும் வகையில் 1973 செப்ரெம்பரில் 6 அம்சங்களைக்கொண்ட அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட்டது.

காலப்போக்கில் இந்த தீர்வுகள், உடன்பாடுகள் புறக்கணிக்கப்பட்டு தெலுங்கானா மக்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்ந்தன. 1985 இல் தெலுங்கானா ஊழியர்கள், அரசாங்கத் துறைகள், திணைக்களங்களில் தமக்கு வேலைவாய்ப்பு பெறுவதில் அநீதி இழைக்கப்படுகிறது என மிகவும் மனம் நொந்து, நீதிகோரி முறைப்பாடு செய்தனர்.

இதன்பால் என்.டி.ராமராவ் தெலுங்கு தேசம் கட்சி அரசாங்கம், அரச வேலை வாய்ப்புகளில் தெலுங்கானா மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் ஒரு அரச ஆணையைக் கொண்டு வந்தது.

1985 இன் பிற்பாடு 1999 வரை எத்தகைய உடன்பாடுகளுமோ தீர்வுகளுமோ உருவாக்கப்படவில்லை. தெலுங்கானா பிரச்சினை தீர்க்கப்படவு மில்லை.

1999இல் தனித் தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்படவேண்டும் என்று காங்கிரஸ் நிபந்தனை வைத்தது.

இந்நிபந்தனைக்கூடாக காங்கிரஸ் ஆளும் தெலுங்கு தேசத்தை தெலுங்கானாவில் தோற்கடிக்க முனைந்தது.

சந்திரபாபு நாயுடு அரசாங்கத்தில் அமைச்சரவைப் பதவி மறுப்புக்குப்பின் சந்திரசேகர் ராவ் 2001 ஏப்ரலில் புதிய கோணத்தில் தெலுங்கானா போராட்டத்தை தொடங்கினார்.

கடந்த பத்தாண்டுகளில் தெலுங்கானாவின் மக்கள் போராட்டம் வலுவடைந்த தன் நிமித்தம் இன்று, 2013 ஜுலையில் இந்தியாவின் ஆளும் கூட்டணி, தெலுங்கானாவை தனி மாநிலமாகப் பிரகடனப் படுத்துவதாக அறிவித்திருக்கிறது.

அவ்அறிவிப்பில், இந்திய நாட்டின் 29வது மாநிலமாக தெலுங்கான அமையும் என்றும், அடுத்த பத்து ஆண்டுகளுக்கு தெலுங்கானாவுக்கும் ஆந்திராவுக்கும் பொதுவான தலைநகரமாக ஹைதராபாத் இருக்கும் என்றும், இன்னும் ஐந்து மாதங்களில் தெலுங்கானா தனி மாநிலமாக உருவாக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 ஆண்டுகளாகத் தொடர்ந்த தெலுங்கான மக்களின் சுதந்திரப் போராட்டம் தனித் தெலுங்கான மாநிலம் என்ற இத்தீர்வுடன் முடிவடையுமா அல்லது தொடருமா என்பதை காலம்தான் முடிவு செய்யும்.

-பாமா-





சந்திரசேகர் ராவ் -உண்ணாவிரதத்தின்போது

தெலுங்கானாவுக்காக உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த இராமநாயுடு-சிலை எதிரிகளால் தாக்கப்படும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திற்காகவும் வெற்றிக்காவும் என்னுடைய ஆன்மாவை நான் விற்பதில்லை.

-நாரணயமூர்த்தி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# பித்தா என்று ஏசுவது;பின் அத்தா என்று பாடுவது

சைவ சமயத்தின் பெருமைக்கும் தொன்மைக்கும் புராணங்களே சான்றாக அமைகின்றன.

புராண படனம் என்ற பாரம்பரியம் எங்கள் மண்ணோடும் எங்கள் வாழ்வோடும் பின்னிப் பிணைந்தவை.

கந்தபுராண கலாசாரம் என்று பேசுமளவிற்கு எங்கள் கலாசாரப் பின்னணி பெருமைபெற்றது.

ஆக, சைவ சமயத்திற்கும் புராணங்களுக்கும் இருக்கக்கூடிய நெருக்கமான உறவை எவரும் பிரித்து நோக்க முடியாது.

அந்த வகையில் சைவசமயத்தில் இருக்கின்ற தடுத்தாட்கொண்ட புராணம் மிகவும் முக்கியமானது.

இப்புராணத்தை ஏனைய சமயத்தவர்களும் அறிந்துகொள்வது பக்தி நிலைப்படுவதற்கும் இறை நம்பிக்கைக்கும் உதவும் எனலாம்.

சுந்தரமூர்த்தி நாயனாரை திருமண பந்தத்தில் இருந்து தடுத்து ஆட்கொள்வதை சித்திரிப்பதே இப்புராணம்.

மணக் கோலத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் வீற்றிருக்கிறார்.

திருமண மண்டபத்தில் நிறைந்த மக்கள் கூட்டம்.

திருமணம் நடந்தேறும் நிலையில் அந்த மண்டபத்திற்குள் தள்ளாடும் வயதுடைய ஞான ஒளிபாய்ச்சும் வேதியப் பெருமகனார் ஒருவர் வருகின்றார்.

வந்தவர் சும்மா இருக்கவில்லை. மணமகனாக இருக்கக்கூடிய சுந்தரமூர்த்தி நாயனார் என் அடிமை என்று கூறுகிறார்.

இந்தக் காலத்து திரைப்படங்கள், தொடர் நாடகங்களில் வருகின்ற கதைகள் போல என்று கூறினாலும் நாம் நடிக்கும் நாடகத்தில் திருமணத்தைத் தடுப்பது ஒரு பெண்ணாக அல்லது ஒரு ஆணாக இருக்க, அவன் நடித்த நாடகத்தில் அவனே வந்தாங்கு தடுப்பதுதான் வேறுபாடு.

மற்றெல்லாம் தடுத்தாட்கொண்ட புராணமே திரைப்படங்களின் கதைக்கான மூலம் எனலாம்.

தளர்நடையில் வந்த வேதியர், மணமகன் தனக்கு அடிமை என்றதும் சுந்தரர் கோபம் கொண்டார். கோபத்தின்பால் வாதம் நடத்தினார்.

பித்தா என்று ஏசினார். அடிமை என்பதற்கு ஆதாரமும் கேட்டார்.

மூல ஆதாரம் தன்னிடம் இருப்பதாகக் கூறிய வேதியர் திருமண மண்டபத்தில் இருந்த அத்தனை பேரையும் திருவெண்ணை நல்லூர்ப் பதிக்கு அழைத்துச் சென்று வந்தது சாட்சாத் ஈஸ்வரன் என்பதைக் காட்டிநின்றார்.

படைத்தவனே தடுத்தாட் கொள்ள வந்தனன் என்பதை நினைத்த சுந்தரன் அழுது தொழுகிறான்.

பரம்பொருளே! தங்களை பித்தா என்று பேசி விட்டேனே என்று பதைபதைக்கிறார்.

இப்பிழைக்கு எப்படிப் பரிகாரம் தேடுவேன் என்று மன்றாடுகிறார்.

சுந்தரா! கவலை கொள்ளற்க! பித்தா என்று என்னைப் பேசிய நின் வாயால் திருமுறை பாடு என்று சிவன் கூற, பித்தா பிறை சூடிப் பெருமானே... என்று பாடுகின்றார் சுந்தரர்.

திருவெண்ணையில் நடந்த அந்த நாடகம் இன்று எங்கள் வடபகுதி அரசியலிலும் நடக்கிறது.

வேட்பாளராகுவதைத் தடுப்பது, அதற்காக பித்தா என்று எழுதுவது, தடுத்தல்புராணம் வெற்றிபெறாவிட்டால் **அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே!** என்று துதி பாடுவது.

அட! அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!

# ஸ்கந்தவரோதயாவில் முத்தமிழ் விழா இன்று

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முத்தமிழ்விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் அதிபர் இ.ஈஸ்வரதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ப.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தேவமனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவின் கலை நிகழ்வுகளாக யா/மகாஜனக் கல்லூரி, யா/யூனியன் கல்லூரி, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகள் பங்குபற்றும் பட்டிமன்றம், கண்ணகி சபதம் என்ற தலைப்பிலான வில்லிசை, மாதவியின் துறவு எனும் நாட்டிய நாடகம், தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற ஒய்யாரக்கொண்டை நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (அ-5)

# சாதனையாளர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறையில் மாகாண நிலையில் சாதனை படைத்து தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள யாழ். மத்திய கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா பாராட்டுப்பெறும் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரங்களை வழங்கி வைக்கவுள்ளார். (அ-5)

# சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு; 16 பேர் கைது

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்கு வித்தகபுரம் கிராமத்தில் சட்டவிரோதமாக இடம்பெற்ற சுண்ணக்கல் அகழ்வை விசேட அதிரடிப் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 4 மணியளவில் காணி உரிமையாளரின் அனுமதி பெறாது சட்டவிரோதமாக வித்தகபுரம் கிராமத்தில் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது அங்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கையை தடுத்து நிறுத்தியதோடு கல் ஏற்றுவதற்காக வந்த 5 உழவு இயந்திரங்கள் உட்பட கல் உடைக்கும் இயந்திரங்களையும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இன்னொரு கல் உடைக்கும் இயந்திரம் அகழ்வு இடம்பெற்ற இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதுடன் அதனை அதிரடிப்படையினர் கண்காணித்து வருகின்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களென 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-28)

# கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற விளையாட்டு அணிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப் பாடசாலையின் கொக்கி விளையாட்டு அணி மற்றும் பூப்பந்து விளையாட்டு அணி மாணவர்கள் மாகாண மட்டத்தில் மூன்றாமிடத்தை பெற்றமைக்காக பாடசாலை சமூகம் இந் நிகழ்வினை ஒழுங்கு செய்துள்ளது. (அ)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

01.08.2013: வினா:- இந்து சமயத்தின் உண்மைப்பெயர் என்ன?
விடை:- சனாதனதர்மம், இந்து சமயம் என்று அழைக்கப்பட்டது.

02.08.2013: வினா:- இந்துசமயத்தின் அடிப்படை நூல்கள் எவை?
விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கவும்.

சின்மயாமிஷன்
யாழ்ப்பாணம்

இல.9., செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.




**இரவு நேரத் தொழுகை**

இறைவன் கூறுகின்றான்: ''நிச்சயமாக இரவில் வணக்கத்தை நிறைவேற்ற எழுவதானது அதுவே மனமும் நாவும் ஒன்றிணைந்திருக்க மிக்க உறுதியானதும் மேலும் கூற்றால் மிக்க உறுதியானதுமாகும்.''

(திருக்குர் ஆன் 73:6)

''இன்னும் இரவில் அவனுக்கு ஸுஜூது செய்து சிரம்பணிவீராக. இரவில் நெடு நேரம் அவனைத் துதி செய்து கொண்டிருப்பீராக''

(திருக்குர் ஆன் 76:26)




மலர்களைப் பற்றிய செய்திகள் தமிழ்மொழியிலே தோன்றிய பக்தி இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மலர்களது பெயர்கள் மட்டும் அன்றி அம்மலர்களில் வந்து தேனுண்ணும் வண்டுகள் பற்றிய வெகுநுட்பமான செய்திகளும் அவற்றில் அடங்கியுள்ளன. மணிவாசகருடைய பாடல்களில் இத்தகைய நுட்பமான செய்திகளைக் காணலாம். பின்வரும் அடிகளால் அத்தகைய செய்தி ஒன்றை விளக்கலாம்.

''...விரையார் நறவந் ததும்பும் மந்தாரத்தில்
தாரம் பயின்று மந்தம் முரல்வண்டு
அதும்பும்கொழுந்தேன் அவிர்சடை''

விரைவாக நறுமணத்தை வீசுகின்ற தேன் நிறைந்த மந்தாரமலரின் கண் எடுத்தல் இசையைப் பாடிப் பின் படுத்தல் இசையை ஒலிக்கும் வண்டுகளும் அவற்றைக்கண்டு ஒதுங்கும் கொழுவிய தேனீக்களும் பொருந்திய ஒளிரும்சடை என இறைவனுடைய சடையை விளக்கும் அவர் வண்டுகளின் வாழ்வியல் பற்றிய நுட்பமான செய்தியையும் இணைத்துள்ளார். வண்டு, தாரம், மந்தம் என்னும் இசை வேறுபாடுகளை இசைப்பதாகக்கூறுவது கவி மரபு. தாரம், மந்தம் இசைக்கும் ஆண் வண்டினைக் கண்டு அதற்கு முன் அம்மலரில் படிந்துள்ள கொழுத்த பெண் தேனீ ஒதுங்கும். இத்தகைய ஓர் இயற்கைத் தோற்றத்தையும் அவர் இணைத் தமை அவருடைய புலமைத் திறனை உணர்த்தி நிற்கின்றது. அடுத்துத் தன்னுடைய துன்ப நிலை பற்றிக் கூறும் போதும் ஓர் உவமையால் விளக்குகிறார். அதுவும் ஒரு இயற்கை பற்றிய செய்தியாகவே உள்ளது.

''பொதும்புறு தீப்போல் புகை தெரியப்
புலன் தீக்கதுவ வெதும்புறுவேன்''

மரப்பொந்திலே பொருந்திய நெருப்பைப்போல புகைந்து எரிகின்ற புலன்களாகிய நெருப்புப் பற்றிக்கொள்ள வெதும்புகின்றேன். மரப்பொந்தினுள்ளே பற்றிய நெருப்பு பொந்தின் வழியாகப் புகைந்து கொண்டு எரிவது போல ஐம்புலன்கள் உள்ளே நின்று அவரைப் பிழையான செயற்பாட்டிலே செலுத்தும் துன்பமான நிலையை விளக்கியுள்ளார். வெளியே எல்லோரும் காணமுடியாத பெருந்துன்பத்தை அவர் அனுபவிக்கிறார்.

இத்துன்பத்தை வானத்தடல் அரசாகிய இறைவன்நீக்க வல்லவன். எனவே தன்னைக் கைவிட்டுவிடாமல் வந்து ஆட்கொண்டருளல் வேண்டுமென விண்ணப்பிக்கிறார். உள்ளத்தில் நாம் அனுபவிக்கும் துன்பத்தை எல்லோருக்கும் விளக்கிக்கூறுவது கடினம். அதனால் இறைவனிடம் கூறி ஆறுதல் பெறுவதும் வழிபாட்டு மரபாக உள்ளது. சுந்தரரும் இத்தகைய துன்பநிலையை ''மூளாத்தீப் போல் உள்ளே கனன்று'' கொண்டிருக்கும் எனப்பாடலிலே குறிப் பிட்டுள்ளார். ஆனால் மணிவாசகர் துன்பத்திற்கான காரணத்தையும் கூறியுள்ளார்.

ஐம்புலன்கள் உலகியல் வாழ்வில் மனிதன் தன்னுடைய நாளாந்தக் கடமைகளைச் செய்ய உதவுபவை. அவற்றின் தொழிற்பாடுகள் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். இல்லாவிட்டால்விரைவாகத் தீய செயற்பாடுகளில் மனிதனை ஈடுபட வைக்கும். தான் அனுபவிக்கும் துன்பத்திலிருந்து மீள ஒரு வழியையும் கூறும் மணிவாசகர் அந்த வழியை எல்லோரும் அறியப் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

**பொதும்புறு தீப்போல் புகை தெரியப்
புலன் தீக்கதுவ
வெதும்புறுவேனை விடுதி கண்டாய்
விரையார் நறவத்
ததும்பு மந்தாரத்தில் தாரம் பயின்று
மந்தம் முரல் வண்டு
அதும்பும் கொழுந்தே அவிர்சடை
வானத் தடலரசே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ.போ.ச. பேருந்து-வடிவாகனம் விபத்து!

## இருவர் படுகாயம்

இ.போ.ச. பேருந்தும் வடிவாகனமும் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் இயக்கச்சி சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரிய வருவது,

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்துடன் பின்னால் வந்த வடிவாகனம் மோதியதிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வவுனியாவை சேர்ந்த சின்னத்துரை நல்லைநாதன் (வயது 45) என்ற வடிவாகன சாரதியும் அளவெட்டியை சேர்ந்த கோபாலகிருஷ்ணம் சிவரஞ்சினி (வயது 30) என்ற இ.போ.ச. பேருந்தில் பயணித்த பெண்ணுமே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துக்குள்ளான இ.போ.ச. பேருந்தும் வடிவாகனமும் பளைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள்ளதுடன் விபத்து சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம)

## புதுமுறிப்புக்குள கழிவுநீரை வெளியேற்றுவதற்கு

# நடவடிக்கை எடுக்குக

(சிவநகர்)

உருத்திரபுரம் பிரதான வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்ற நிலையில் உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு ஆகிய கிராமங்கள் ஊடாக செல்லும் புதுமுறிப்புக்குள கழிவு நீர், புனரமைக்கப்பட்டு வரும் இவ் வாய்க்காலில் பல மாதமாக தேங்கி காணப்படுவதால் புனரமைப்பு வேலைகள் சீரான முறையில் இடம்பெறமுடியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரணைமடுகுள நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்ற நிலையில் உருத்திரபுரம் தெற்கு பகுதியில் உள்ள புதுமுறிப்புகுள கழிவுநீர் உருத்திரபுரம் பிரதான வாய்க்கால் ஊடாகவே ஓடுகின்றது.

இதன் காரணத்தால் அதிகளவான கழிவுநீர் உருத்திரபுரம் பிரதான வாய்க்காலில் இரு இடங்களில் தேங்கி நிற்பதால் டெங்கு நோய் பரவக் கூடிய சூழல் உருவாகவுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கழிவுநீர் வாய்க்கால்கள் ஊடாக ஓடாது தேங்கி நிற்பதால் அதனை வெளியேறுவதற்காக உருத்திரபுரம் மேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான வீதியில் மூன்று, நான்கு கோஸ்வேகள் தோண்டப்பட்டு உள்ளமையால் இதனூடே கழிவுநீர் ஊடறுத்து செல்லும்போது இப்பாதையால் பயணம் செய்யும் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

எனவே, மேற்குறித்த பிரதான வாய்க்காலில் உள்ள கழிவுநீரை வெளியேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதுடன் புதுமுறிப்புக் குள கழிவு நீர் ஓடுவதற்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படின் உருத்திரபுரம் பிரதான வாய்க்கால் அபிவிருத்தி வேலைகள் சிறப்பாக அமைய ஏதுவாகும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-254)

## கொக்கிளாய் கடற்பரப்பில் தேடுதல்

# தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்களமும் முல்லைத்தீவு பொலிஸாரும் இணைந்து கொக்கிளாய் கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய தேடுதலின்போது தடை செய்யப்பட்ட 164 மீன்பிடி வலைகளை கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி இரு சாராரும் இணைந்து நேற்று முன்தினம் இரவு 9 மணியில் இருந்து 12.30 மணி வரை கொக்கிளாய் கடற்பகுதியில் தேடுதல் நடத்திய போது சுமார் 8 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான 164 தடை செய்யப்பட்ட வலைகள் விரிக்கப்பட்டிருப்பதை அவதானித்து அவற்றை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றிய பொருட்களை நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதவான் தடைசெய்யப்பட்ட அனைத்து வலைகளையும் தீயிட்டு கொளுத்துமாறு உத்தரவிட்டார்.

மேலும் அதே பிரதேசத்தில் கடற்றொழிலுக்கு தங்கூசி வலையை பயன்படுத்திய கொக்கிளாயை சேர்ந்த நபர் ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்துள்ளார்.

(செ-267)

## வவுனியா தெற்கு வலய மாணவர்களின் உயிரியல் பல்வகைமை சூழலியல் ஆய்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் இருந்து 2014 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள உயிரியல் பிரிவு மாணவர்களின் உயிரியல் பல்வகைமை சூழலியல் ஆய்வு இன்று, நாளை , நாளைமறுதினம் ஆகிய மூன்று தினங்களில் நடைபெறவுள்ளது.

சேவாலங்கா நிறுவனத்தினதும் அதன் பங்காளி நிறுவனங்களினதும் அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலய விஞ்ஞான களக் கற்கை நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் உயிரியல் பல்வகைமை சூழலியல் ஆய்வு யாழ்.மாவட்டத்தின் வடமராட்சி பிரதேசத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ் ஆய்வில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 50 மாணவர்களும் விஞ்ஞான களக்கற்கை நிலைய முகாமையாளர் அ.ஜெய்க்கீஷன் தலைமையில் ஈடுபடவுள்ளனர்.

இவ் ஆய்வுக்கான ஆலோசனை வழிகாட்டலை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.செ.அன்ரன் சோமராஜா, யாழ். பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்களும் கலாநிதிகளும் வழங்கவுள்ளனர்.

(ம-266)

## கட்டாக்காலிகளால் சிரமத்தை எதிர்கொள்ளும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலிகள் அதிகமாக நடமாடுவதனால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கட்டாக்காலிகள் முல்லை.மாவட்ட செயலக முன்றல், சிலாவத்தை சந்தி, முல்லைத்தீவு பட்டணம், முள்ளியவளை பொதுச் சந்தை போன்ற இடங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் இடம்பெறலாம் என பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதற்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு மக்கள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ம-9-267)

# ஆங்கிலதின போட்டி முடிபுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

உடன் தயாரித்து உரை நிகழ்த்துதல்

தரம் 13

எல்.யாழினி (கிளி/பூநகரி ம.வி)

உரத்துப் பேசுதல்

தரம்3

பி.நிறோஜன் (கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), ஏ.கேனுசன் (கிளி/நல்லூர் ம.வி.), எஸ்.புகழினி (கிளி/ஜெயபுரம் ம.வி)

தரம் 4

யு.காவியா (கிளி/முழங்காவில் ஆரம்ப பாடசாலை), ஜி.சாருகன் (கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), ஆர்.வாசுகி ( கிளி/ செல்லையாதீவு அ.த.க. பாடசாலை)

தரம் 5

யு.யதுர்சிகா (கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை), ஏ.சாயிராம் (கிளி/நல்லூர் ம.வி), கே.யதுறியா (கிளி/பூநகரி ம.வி)

கதைகூறல்

தரம் 6

ரி.கௌசல்யா (கிளி/ஜெயபுரம் ம.வி), என்.நர்மதா (கிளி/ முழங்காவில் ம.வி), ஜே.அனோஜா (கிளி/ முழங்காவில் ம.வி)

தரம் 7

பி.அஜந்தினி (கிளி/ முழங்காவில் ம.வி), எம்.கஜலக்ஷி (கிளி/ முழங்காவில் ம.வி)

தரம் 8

எஸ்.சுஜாதா (கிளி/முழங்காவில் ம.வி), கே.அனிசா (கிளி/ முழங்காவில் ம.வி), எம்.இசைக்கனி (கிளி/ நல்லூர் ம.வி)

தரம் 9

பி.கிந்துஜா (கிளி/முழங்காவில் ம.வி), ஆர்.வித்தியா (கிளி/ முழங்காவில் ம.வி), கே.தனுசா (கிளி/ஜெயபுரம் ம.வி)

தனிநபர் நடிப்பு

தரம் 10

எஸ்.வினோலிசா (கிளி/ ஜெயபுரம் ம.வி)

தரம்11

கே.டனுஜா (கிளி/நல்லூர் ம.வி)

தரம் 12

எஸ்.தட்சாயினி (கிளி/பூநகரி ம.வி), எஸ்.கிருஷ்ணரூபன் (கிளி/ பூநகரி ம.வி)

தரம் 13

வி.சரண்யா (கிளி/பூநகரி ம.வி),

பாத்திரமேற்று நடித்தல்

தரம் 6

கிளி/முழங்காவில் ம.வி

தரம் 7

கிளி/முழங்காவில் ம.வி

கிளி/முக்கொம்பன் அ.த.க. பாடசாலை

தரம் 8

கிளி/முழங்காவில் ம.வி, கிளி/ முக்கொம்பன் அ.த.க. பாடசாலை

தரம் 9

கிளி/முழங்காவில் ம.வி

தரம் 10

கிளி/முழங்காவில் ம.வி, கிளி/ ஜெயபுரம் ம.வி

தரம் 11

கிளி/முழங்காவில் ம.வி

(தொடரும்...) (ம-84)




## ஆசிரிய உதவியாளர்களுக்கான கருத்தரங்கு

(சிவநகர்)


கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நியமனம் பெற்ற ஆசிரிய உதவியாளர்களுக்கான கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு எடிசன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பயிற்சி கல்லூரிக்கான அனுமதி தொடர்பான விடயங்களும் வேறு பலவிடயங்களும் கலந்துரையாடப்படவுள்ள தால் அனைத்து ஆசிரிய உதவியாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு 4 வது வெற்றி

# அசத்தும் ஹோலி அன் கோ



இந்திய கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதுவரை நடந்த 3 போட்டிகளிலும் இந்தியா வென்று தொடரை கைப்பற்றியது.

இந்நிலையில் 4-வது ஒருநாள் போட்டி புலவாயோவில் நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் வீராட் ஹோலி களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

சிம்பாப்வேயின் சிபாண்டா- சிகன்டர் ரஸா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

ரஸா 7 ஓட்டங்களில் மோகித் சர்மா பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மககட்ஷா 11 ஓட்டங்களுக்கு ரன் அவுட் ஆனார்.

அதன்பின் வந்த அணித்தலைவர் ரெய்லர், வில்லியம்ஸ் அடுத்தடுத்து ஓட்ட மேதும் எடுக்காமல் ஆட்டமிழக்க சிம்பாப்வே அணி 42.4 ஓவரிக்குள் 144 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கெட்டு களையும் இழந்தது.

சிகிம்புரா மட்டும் அவுட்டாகாமல் 50 ஓட்டங்களை எடுத்தார்.

இந்திய அணி சார்பில் மிஸ்ரா 3 விக்கெட்டும், மோகித் சர்மா, ஜடேஜா தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். பின்னர் 145 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக புஜாராவும், ரோகித் சர்மாவும் களமிறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். அணியின் ஓட்டஎண்ணிக்கை 23-ஆக இருந்தபோது, சதாரா பந்தில் ஸ்டம்புகளை பறிகொடுத்து புஜாரா வெளியேறினார். அவர் 13 ரன்கள் மட்டுமே எடுத்திருந்தார்.

பின்னர் ரோகித் சர்மாவுடன், சுரேஷ் ரெய்னா இணைந்தார். இருவரும் பொறுப்புடன் விளையாடி அரை சதத்தை கடந்தனர். 30.5 ஓவர்களில் இந்திய அணி வெற்றி இலக்கை எட்டியது. ரோகித் சர்மா 64 ஓட்டங்களுடனும், சுரேஷ்ரெய்னா 65 ஓட்டங்களுடனும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனால் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாப்வேயை வீழ்த்தியது.

இதன்மூலம் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில் 4-0 என்ற புள்ளிக் கணக்கில் தொடர்ந்து முன்னிலை பெற்று வருகிறது.




# சங்கங்கார 4-ம் இடத்தில்

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர்களின் பட்டியலில் குமார் சங்கக்கார நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான நேற்று முன்தினப் போட்டியில் ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் 11,798 ஓட்டங்கள் என்ற இந்த மைல் கல்லை அவர் எட்டியுள்ளார்.

11,739 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இன்சாம் உல் ஹக் இதுவரை நான்காம் இடத்தினைப் பெற்றிருந்தார்.




இந்தப் பட்டியலில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் முதலாம் இடத்தில் உள்ளதுடன், ரிக்கி பொண்டிங் மற்றும் சனத் ஜயசூரிய ஆகியோர் 2 ஆம் மற்றும் 3 ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

# அன்டர்சனே உலகில் சிறந்த பந்துவீச்சாளர்

**-வசிம் அக்ரம்**




இங்கிலாந்து அணி வேகப்பந்து வீரர் அன்டர்சன் உலகின் சிறந்த பந்துவீச்சாளர் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வசிம் அக்ரம் கூறியுள்ளார்.

முன்னாள் பிரபல வேகப்பந்து வீரரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான அவர் இது குறித்து கூறியதாவது,

தற்போதைய நிலையில் இங்கிலாந்து வீரர் ஜிம்மி அன்டர்சனே பந்துவீச்சில் முன்னிலையில் உள்ளார். என்னை பொறுத்தவரை அவர் தான் தற்போது உலகின் சிறந்த வேகப்பந்து வீரராக இருக்கிறார். அவரது பந்துவீச்சு எப்போதும் நேர்த்தியுடன் இருக்கிறது. புதிய பந்தையும்,பழைய பந்தையும் ஒரே இலக்குடன் வீசக்கூடியவராக உள்ளார். அவரது சுவிங் பந்து வீச்சு சிறப்பாக இருக்கிறது.

ஸ்டெய்னால் ஒரு ஓவரில் ஒரு முறை தான் சுவிங் பந்து வீச முடிகிறது. ஆனால் அன்டர்சன் 6 பந்தையும் சுவிங் செய்ய கூடியது என்றார்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் கிண்ணம் ஜொனியன்ஸ் அணி முன்னிலை




ஜோர்ஜ் வெப் ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் 2010ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நான்காவது ஆண்டாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2013-31.07.2013 வரை நடைபெற்ற 116 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ்.ஜொனியன்ஸ் அணி மீண்டும் முன்னணியில் உள்ளது.

மேற்கொள்ளப்பட்ட போட்டிகள் முடிவுற்ற நிலையில் கழக அணிகளின் நிலைகளும் பெற்ற புள்ளிகளும் பின்வருமாறு,

110.8 புள்ளிகளுடன் யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டு கழகம் முதலிடத்தையும்,7.9 புள்ளிகளுடன் யாழ்.பல்கலைக்கழகம் 2-ம் இடத்தையும், மானிப்பாய் பரீஸ் 3-ம் இடத்தையும், ஜொலிஸ்ரார் 4-ம் இடத்தையும கே.சீ.சீ. 5-ம் இடத்தையும் ஓல்ட் கோல்ட்ஸ் 6-ம் இடத்தையும் சென்றலைட்ஸ் 7-ம் இடத்தையும் யாழ்.சென்றல் வி.கழகம் 8-ம் இடத்தையும் கிறாஸ்கொப்பேஸ் 9-ம் இடத்தையும் ஸ்ரான்லி வி.க 36 புள்ளிகளைப் பெற்று 10-ம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# 11 கட்சிகள், 9 சுயேட்சை

சுயேட்சைக் குழுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேவளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான அதாவது தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ள கட்சிகளான ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனசத பெரமுன, சோசலிச சமத்துவக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஜனநாயக கட்சி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிசக் கட்சி, ஸ்ரீலங்கா மகாஜன பட்ஷய ஆகிய 11 அரசியல் கட்சிகளும், 9 சுயேட்சை குழுக்களும் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தத் தேர்தலில் வாக்கு எண்ணும் பணிகள் மாவட்ட செயலகத்திற் வெளியில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறும் எனவும் இதற்கு எந்தவொரு அரசியல் கட்சியும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை எனவும் இதற்கான ஆலோசனைகளை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளிடம் தாம் கோரவில்லை எனவும் தெரிவித்தார்.

அத்தோடு இதுவரை தேர்தல் விதிமுறைகளை மீறியது தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின போது பிரதித் தேர்தல் ஆணையாளர் (நிர்வாகம்) எம்.எம்.மொஹமட், வட மாகாண பிரதித் தேர்தல் ஆணையாளரும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருமான சிவசுதன் [illegible] கலந்து கொண்டிருந்தனர். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SLEAS கருத்தரங்கு

(3520)

பாடசாலை விடுமுறை நாட்களில் நடைபெறும்
திங்கள் (12/08), செவ்வாய் (13/08), புதன் (14/08)
நாட்களில் காலை 9.30 தொடக்கம் மாலை 3.30
மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
[யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்]

தொலைபேசி : 0754164564

## A/L 2015

தொழில் நுட்பவியல் பாடநெறிகள்
புதிய பிரிவுகள்
- Engineering Technology
- Bio - Systems Technology
- Science For Technology
- ICT

ஆரம்பம் : 03.08.2013
காலை 10 மணி

DCM யாழ்.நகர் (C-4190)

## சிங்கப்பூர்

STUDY & WORK with HIGH PAYED PLACEMENT

HOTEL MANAGEMENT

Closing Date 06/08/2013 With GCE(O/L)

- 3 மாதம் படிப்பு, 6 மாதம் சம்பளத்துடன் கூடிய பயிற்சி
- பயிற்சியின் போது மாதம் Rs 100,000 மேல்
- Payment after the Visa
- படிப்பின் பின்னர் UK, NEW ZELAND & FRANCE போன்ற இடங்களுக்கு இடமாற்றம் பெறமுடியும்

With in 3weeks your visa will ready
Handover your documents before 06/08/2013

* Condition Apply

GSW GLOBAL STUDY & WORK CONSULTANTS
Tel : 077 007 1835
Mail : gswvisa@gmail.com
(3515)

## உலகின் எந்த மூலைக்கும் படிக்க உழைக்க எம்மிடம் மட்டுமே...

(C-4192)

டென்மார்க்கில் படிக்க இரண்டு லட்சம் வரை உழைக்க

சட்ட ஆலோசனைக்கு :

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090

## VACANCY

எம்முடன் இணைந்து நீங்களும் பணிபுரியலாம்.

யாழ் மண்ணில் விஸ்தரிக்கப்பட்டு, உலகலாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான கிளைகளைக் கொண்டிருக்கும் எமது INNOVAGE COMPANYக்கு யாழ். மண்ணில் புதிய கிளைகளுக்கு பணிபுரிய துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் கொண்ட இளைஞர்கள் தேவை
- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சின் போது 12,000/= - 15,000/- பெறலாம்.
- உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம்.

(3518)

தொடர்புகளுக்கு : 0777981471, 0770771377, 0217200867
இன்று அழையுங்கள், நாளை இணையுங்கள்...

## விரும்பிய நாட்டில் Work Permit உடன் வேலைவாய்ப்பு...

அனுமதி பெற்ற 15 மாணவர்களுக்கான
விசா வழங்கல்
மற்றும்
புதியவர்களுக்கான விளக்கக் கருத்தரங்கு &
உடனடி அனுமதி வழங்கல்

அனுமதி இலவசம்

உலகம் முழுவதும் சுற்றியபடி அமெரிக்க டொலரில் சம்பாதிக்கும் கப்பல் வேலைவாய்ப்பு

3 ஸ்டார் 5 ஸ்டார் ஹொட்டேல்களில் கௌரவமான நிரந்தர வேலைவாய்ப்பு

இவற்றுடன்
மிகக்குறைந்த செலவில் தொழில் உத்தரவாதமான சர்வதேசப் பல்கலைக்கழகங்கள்

27.07.2013 அன்று ஒரு தொகுதியினருக்கு விசா வழங்கப்பட்ட போது...



காலம்: 03.08.2013 சனி காலை 9 மணி
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்

பதிவுகளுக்கு 077 3616 798 (C-4193)

சிகரம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(764 பஸ் வழி: DAMRO காட்சியறைக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk


## தேர்தலின் போது...

கூட்டமைப்பின் வேட்பாளர்களை அச்சுறுத்துவதாக முன்வைக்கப்பட்ட குற்றச சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதால் அதுபற்றி தற்போது எதுவும் கூறமுடியாது.

ஆனால், அப்படி நடப்பது எங்களுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். இராணுவத்தினர் தேர்தல் காலங்களில் முகாம்களில் இருக்க வேண்டும் என்பதுதான் எங்களு டைய கோரிக்கை என அவர் மேலும் தெரிவித்தார். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும்பாராளு மன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மற்றும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவா ஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-6)


## மரண அறிவித்தல்

ரவிந்தன் பரமசிவம்
(St.John's Collage-91 Batch)

பிறப்பு 18 10 1972



இறப்பு 30 07 2013

புத்தூர் மேற்கைச் சேர்ந்த ரவிந்தன் பரமசிவம் இறைவன் பணியில் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து 30.07.2013 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி எய்தினர்.

அன்னார் புத்தூர் மேற்கைச் சேர்ந்த முன்னாள் விதானையார் சங்கரப்பிள்ளையின் பேரனும், தெல்லிப்பளை கொல்லங்கலட்டியை சேர்ந்த அமரர் பரமசிவம், புத்தூரைச் சேர்ந்த திருமதி ராசாத்தி பரமசிவம் ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும் , ராகுலன் (88 Batch, அவுஸ்ரேலியா) ராகவன் (90 Batch, அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை 2-ம் திகதி காலை 9 மணிக்கு இல. 111, கண்டி வீதி, சுண்டுக்குளியில் நடைபெறும்.

தகவல்:குடும்பத்தினர்(0775103104)

(3519)


## செப்ரெம்பர் 21 இல்...

மத்திய மாகாண சபை, வட மேல் மாகாண (வயம்ப) சபை மற்றும் வடமாகாண சபை ஆகிய வற்றுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கும் பணிகள் நேற்று முதலாம்திகதிவியாழக் கிழமை நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்ததையடுத்து, இந்த அறிவித்தல் வெளி யிடப்பட்டிருக்கின்றது.

வட மாகாண சபைக்கான தேர்தல் புல்வேறு இழுபறிகள், விமர்சனங்களுக்கு மத்தியில் மிகவும் தாமதமாக நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் ௰1 அரசியல் கட்சிகளும், 9 சுயேட்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றன.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் நாட்டின் முக்கிய கட்சிகள் பலவும் களத்தில் இறங்கியிருக்கின்றன. அவற்றுடன் பல சுயேச்சை குழுக்களும் போட்டியிட முன்வந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேர்தலில் மொத்தமாக 142 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். வட மாகாண சபைக்கென 36 உறுப்பினர்கள் வாக்களிப் பின் மூலம் முதல் முறையாகத் தெரிவு செய்யப் படவுள்ளனர்.

நாட்டின் முக்கிய எதிர்க் கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சி வவுனியாவில நேற்றுத் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது. (எ-8)




## வெற்றி மேல் வெற்றி

6 மாத கால Visit Visa வென்றனர்

28, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இளைப்பாறிய உத்தியோகத்தரான திரு. A.S.M.L.தேவராஜாவும் அவரது மனைவியான திருமதி பிறேமரஞ்சினி தேவராஜாவும் திசைகாட்டியின் சிறப்பான வழிகாட்டலில் இங்கிலாந்திற்கான 6 மாத விசிற் விசாவை வென்றுள்ளனர்.

எனவே விசிற் விசா நீண்ட காலம் வென்றிட திசைகாட்டியிடம் நம்பி வாருங்கள்.

(C-4192)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொ.பேசி 021 2219016, 0215689090

## மிக உயர்தரம் கொண்ட மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு தேவையான யாழ் நாகர் கோவில் மணல் உள்ளடங்கலாக மணல் தேவைப் படுபவர்கள் குறிப்பிட்ட இடங்களிலேயே விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வட பிராந்தியக் காரியாலயம்.
ஈஸ்வரபகவான் & கம்பனி
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.

0770035091 (விண்ணன்) 0770035088 (முருகதாஸ்)
0770035092 (பகீரதன்) 0770035110 (கிரி)

(C-4182)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு.கந்தையா வல்லியுரம்
(ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்)



திதி: ஏகாதசி
(02.08.2013)

28.09.1934 மண் மகிழ 17.03.1938
04.08.2009 கண் நெகிழ 12.08.2012

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வல்லிபுரம் புவனேஸ்வரி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

எல்லாம் நன்மைக்கே என்று கூறி போனதிசை எதுவோ
திக்கெல்லாம் தேடுகின்றோம் - ஆனாலும் திசை தெரியாது தவிக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(3516)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.